விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 19 சனிக்கிழமை (02.05.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## தேர்தல் முறை மாற்றம்

# இனவாதத்தின் புதிய அத்தியாயம்


## கொழும்பில் மனோ முழக்கம்

(கொழும்பு)

சிறுபான்மை மக்களை வஞ்சிக்க உத்தேசிக்கும் தேர்தல் முறை மாற்றம் இந்நாட்டிலே தொன்றுதொட்டு நிலவும் இனவாதத்தின் புதிய அத்தியாயம் ஆகும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## உலகின் மிகப்பெரிய புத்தர்



24ஆம் பக்கம் பார்க்க....

## மக்கள் எழுச்சியுடன் வடக்கில் மே தினம்







(யாழ்ப்பாணம்)

தொழிலாளர்களின் உரிமையை வலியுறுத்திய சர்வதேச மே தின நிகழ்வுகள் வடக்கு மாகாணத்தில் மக்களின் பலம்மிக்க ஆதரவுடன் எழுச்சியாக கொண்டாடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய அனைத்து இடங்களிலும் தொழிலாளர்களின் உரிமைக்கான குரல்கள் பேரார்வத்துடன் எழுப்பட்டதுடன் பேரணிகளும் ஊர்வலங்களும் ஆங்காங்கே சிறப்பாக நிகழ்த்தப்பட்டிருந்தன.

இதில், வடக்கு மாகாண கூட்டுறவாளர்களின்மே தின ஊர்வலம் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்புடன் யாழில் நேற்றைய தினம் எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.

நல்லூர் கிட்டுப் பூங்காவில் இருந்து பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால்

24ஆம் பக்கம் பார்க்க....

## சிறுநீரக கற்களை அகற்றும் தோல் மூலமான சத்திர சிகிச்சை

### யாழ்.போதனாவில் முதன்முறையாக அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் முதன் முறையாக தோல் மூலமாக சிறுநீரக கற்களை அகற்றும் சத்திர சிகிச்சை [percutaneous nephrolithotomy] முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சிகிச்சை முறையிலான சத்திர சிகிச்சை ஒன்று நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

இச் சத்திர சிகிச்சையினை சிறுநீர் சனநீர் தொகுதி சத்திரசிகிச்சை நிபுணர் பா.சதீசன் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இச்சத்திர சிகிச்சை தொடர்பில் வைத்திய நிபுணர் சதீசன் தெரிவிக்கையில்,

சிறுநீரகத்தில் கல் ஏற்பட்டால் கல்லை வெட்டி

24ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டுறவுத்துறை அபிவிருத்திக்கு 100 நாள் வேலைத்திட்டம்

### முன்னெடுக்கவுள்ளது வடக்கு மாகாண சபை

(யாழ்ப்பாணம)

வடக்கு மாகாண கூட்டுறவுத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு வடக்கு மாகாண சபை நூறு நாள் வேலைத்திட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கூட்டுறவாளர்களின் மே தின கூட்டம் நேற்று பிற்பகல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத்துறை போரின் பின்னர் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற போர் தான் காரணமாக கூறப்பட்டு வருகின்றது.

எனினும் இதே காரணத்தை நாம் தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருக்க முடியாது.

24ஆம் பக்கம் பார்க்க....

## சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(சிட்னி)

பசுபிக் பெருங்கடல் அருகே அமைந்துள்ள பப்புவா நியூ கினியாவில் நேற்று வெள்ளிக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.1 ஆக பதிவாகியுள்ளது. பப்புவா நியூ கினியாவில் கோகோபோ நகரில் இருந்து தெற்கு - தென் மேற்கு பகுதியில் 110 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கடமை நிறைவேற்று அதிபர் சங்க பொதுக் கூட்டம்

வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களின நியமனக் கடிதத்தைப் பரிசீலித்தல் மற்றும் உரிய தரப்பினர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக தரவுகளை சேகரித்து இறுதிப்பட்டியல் தயாரித்தல் என்பன இடம்பெற இருப்பதனால் இக் கூட்டத்திற்கு வட மாகாணத்தில் உள்ள அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்தின் தலைவர் ரி. ஜெயதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

## சித்திரைப் பூரணை நிகழ்வு நாளை

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவும் வேதாந்த மடமும் இணைந்து சித்திரைப் பூரணை நிகழ்வை நடத்த ஏற்பாடாகியுள்ளது. மேற்படி நிகழ்வு நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு 18, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சிவகுருநாத குரு பீடம் வேதாந்தமடம் மகாதேவ ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தாவடியூர் கே.எஸ்.ஆர் திருஞான சம்பந்தன் ஓதுவாருடைய திருமுறை விண்ணப்பம் இடம்பெற்று தொடர்ந்து சுவாமிகளின் சமாதிகளுக்கு விசேட அபிசேக ஆராதனைகள், பூசை வழிபடுகள இடம்பெறவுள்ளது. மேலும் சிவவழிபாடு எனும் தலைப்பில் கு.பாலசண்முகனின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## நாளை நடைபெறாது

சங்கானை பிரதேச மத்தியஸ்த சபையின் பிணக்கு தொடர்பான கலந்துரையாடல்கள் சித்திரை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறாது எனவும் மீண்டும் அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை வழமை போல் பிணக்க தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறும் எனவும் மத்தியஸ்த சபையின் தவிசாளர் எஸ்.ஜெகநாதன் தெரிவித்துள்ளார். (இ-134)


**அதிபர் சேவை தரம்-3 போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்புக்கள்**

பிரிவு–I ஒவ்வொரு ஞாயிறும்
1.00 மணி–5.00 மணிவரை
பிரிவு–II புதன், வியாழன்
பி.ப 5.00–7.00 மணிவரை

SLEAS அதிகாரிகள்,
SLEAS விரிவுரையாளர்கள்
மற்றும் துறைசார் வளவாளர்களினால் தேவையான முக்கிய விடயங்கள் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஒழுங்காக எந்தவித தடங்கலும் இல்லாமல் நடைபெறும் ஒரே இடம்.

தொ.பே:-0766883394

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**

(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

(சி-877)


## நீங்கா! நினைவலைகள் ஐந்தில்



செல்வன். **மகாலிங்கம் சதீஷன்**

பணிப்பாளர்
(பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)

அகவை ஐந்து சென்ற போதிலும்
அன்பு கொண்ட உன் நினைவுகள் நீங்கவில்லை எம்மை விட்டு
அவநியில் நீ என்று உதிப்பாய் - என்று
இந்நாள் வரை காத்திருக்கிறோம்.

ஆறுதில்லை உன்னை விட்டு எம்மனம்
ஆனாலும் நிறுத்துவதில்லை உன் முயற்சி.....

மலர்வு 09.09.1984 உதிர்வு 02.05.2010

என்றும் உன் நினைவுடன் உறவுகள்
பிள்ளையார் கோவில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

(சி-875)

## மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 2015-ம் ஆண்டு மே தின நிகழ்வின் போது...




















ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளரும் மத்திய குழு உறுப்பினரும் வட மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட இளைஞர் அணியினர் மே தின நிகழ்வில் கலந்து கொண்ட போது எடுத்த படங்களின் தொகுப்பு.

(252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பம். தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000/- 35,000/ வரை தங்குமிடம், உணவு+ பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

(076 639 8366)



## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

(C-478)

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் செல்வராசா கமலாம்பாள்

அம்மா அம்மா நீ எங்கே அம்மா
உன்னை விட்டா எனக்குயாரு அம்மா
தாயே உயிர் பிரிந்தாயே
என்னை தனியா தவிக்கவிட்டாயே!

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மகள் பிரதிகா
மகன் நிசன்
குடும்பத்தினர், நவாலி தெற்கு.


## காணி உடன் விற்பனைக்கு

பளையில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் A9 வீதியில் தென்னை ஆராய்ச்சி நிலையத்திற்கு வடக்கே 35 ஏக்கர் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: வே. அன்னலிங்கம், வண்ணாங்கேணி- பளை

077 012 2689


## தவறிவிட்டது

சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட தூரத்தில் J.ஜென் சரீமா என்பவரின் அடையாள அட்டையும் சாரதி அனுமதிப்பத்திரமும் அடங்கிய கைப்பை தவறி விட்டது. கண்டெடுத்தவர் கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவும்.

அடையாள அட்டை இலக்கம்: 836793552V
சாரதி அனுமதி பத்திர இலக்கம்: 22118980
தொடர்புகளுக்கு: 077 055 6375
076 656 1021
இல. 28, A.V.வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.


## தேவை

துறைமுகம், விமான நிலையத்திற்கு 18-55 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விரைவாக தேவை. தங்குமிடம்/ உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவ்வேலையில் பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும். உயர்ந்த சம்பளத்துடன் உடை இலவசமாகக் கொடுக்கப்படும்.

(231)

0759219226



## தேவை

துறைமுகம்/ விமான நிலையங்களில் உல்லாச பிரயாணத் துறையில் போக்குவரத்து சேவைக்காக கனரக/ மென்ரக சாரதிகள்/சாரதி உதவியாளர்கள் தேவை

45000/=

(231)

0759219227


# மரண அறிவித்தல்

## K.T. வேலுப்பிள்ளை சிவநாதன் (சிவாக்குட்டி)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட K.T. வேலுப்பிள்ளை சிவநாதன் (சிவாக்குட்டி) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரணி வேலுப்பிள்ளை (K.T.V.) உரும்பிராய் தங்கரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான அச்சுவேலி கந்தசாமி நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரேமாவின் (கனடா) அன்புக் கணவரும் சஜன் (கனடா), கஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன், நாகபூஷணி அம்மா, கணேசநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரராணி (பட்டு), நாகரத்தினம் (ஓய்வு நிலை முகாமையாளர் (இலங்கை வங்கி), ஆனந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 03.05.2015 நாளை ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தங்கவேல் மாளிகை
மானிப்பாய் வீதி, உரும்பிராய்.
தொ.பே.இல. 021 223 0993
011 308 8649, 076 675 3948
077 259 2332

தகவல்:-
K.T.V. சண்முகநாதன்
(சகோதரர்)


July 23rd யாழ்ப்பாணத்தில் நடைபெறும்
பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்



**IELTS™**
English for International Opportunity

## Speciality of our course

- Special attention to Advanced Grammar Vocabulary
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

### IELTS™ Life Skills

**From 2015 May IELTS Life Skills Course will be available at this centre.**

திருமணம் செய்து u.k க்கு
செல்வதற்கான settlement visa விற்கு இனிமேல் IELTS Life Skills பரீட்சையை எடுக்கவேண்டும்.
**IELTS Life Skills is available at two levels.**
***IELTS Life Skills-$A_1$ speaking and listening**
***IELTS Life Skills-$B_1$ speaking and listening**
அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்பட்டு ஒரே தடவையில் $B_1$ பரீட்சையில் சித்தியடைய உங்களை ஆயத்தப்படுத்துவோம்.

வகுப்புக்கள் 04.05.2015 ல் ஆரம்பம்.




### Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 8.30-10.30, 5.00 - 700 |

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887


மகாதேவாய நம

## மகாதேவ ஆச்சிரமம்
## ஜெயந்தி நகர்
## கிளிநொச்சி

Regd.no.svp 104/44

ஆண்டுப் பொதுக்கூட்டம்
இடம்: ஆச்சிரம மண்டபம்
காலம்: 04.05.2015 திங்கள், பி.ப.3 மணி

நிகழ்ச்சி நிரல்
தேவாரம்
தலைமையுரை
செயலாளர் அறிக்கை
நிதி அறிக்கை
விசேட தீர்மானங்கள்
நிர்வாக சபைத் தெரிவு
நன்றியுரை

அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

சிவன் சேவடி போற்றி
இறைபணியில்
ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
குருபீடாதிபதி

(229)

குறிப்பு:இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

# கண்ணீர் அஞ்சலி



பூநகரியை பிறப்பிடமாகவும் கனடா மேபிள் (Maple) நகரில் புகழ்பெற்ற ஊடகவியலாளராக அரசியல் ஆய்வாளராக Air Canada விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றியவரான எம் மண்ணின் மைந்தன்

## அமரர் பொன்னம்பலம் குகதாசன்

மாரடைப்பால் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். துயருறும் துணைவியார் வசந்தி, பிள்ளைகளாகிய அபிராமி, தர்மினி ஆகியோருக்கு மருத்துவர்களான ஆனந்தி, திலீபன், ஆனந்தஸ்ரீ, நிதர்சினி (மருத்துவபீட மாணவி), அஞ்சனன் (IT Coordinator OMEGA Line Pvt), நிசாந்தி (IE Executive MAS holdings pvt) சிவஸ்கந்தஸ்ரீ (சட்டபீட மாணவன்), நிமலநேசன் (ஆசிரியர்), பானுஸ்ரீ (நிர்வாகப் பயிலு நர்), மாணவர்களான அருளினி, அம்பலன் மற்றும் சர்மிலா, கயல்விழி சார்பாக அனுதாபத்தை தெரிவித்து அன்பரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி!

பூநகரி
077 804 6972,
077 696 0063

பூநகரி
பொதுமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 190**

## பொறாமையிலிருந்து விடுதலை

...நீங்கள் எதுவுமே போதுமான அளவு இல்லை என்று உணர ஆரம்பிக்கிறீர்கள். எதுவும் நிகழாததால் நீங்கள் சோர்வாகவும் எல்லாச் சக்தியையும் இழந்துவிட்டதாகவும் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவும் உணர்கிறீர்கள். இவ்வாறுதான் பிரச்சினை உருவாகிறது.

பாருங்கள்... தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் வேறுபாடு இருக்கிறது. உங்கள் தேவைகள் அனைத்திற்கும் ஏற்கனவே ஏதோ ஒரு வகையில் அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. உங்கள் தேவைகளைத் திருப்திப்படுத்திவிட முடியும்; ஆனால், உங்கள் ஆசைகளைத் திருப்திப்படுத்துவது முடியாத காரியம். ஏனெனில், எப்பொழுதும் அவை மாறிக்கொண்டும் தெளிவற்றும் இருக்கின்றன. ஒவ்வொரு முறை ஒரு விருப்பம் அல்லது ஆசை நிறைவேறும் பொழுதும் இன்னும் நூறு வந்து விடுகிறது.

முடிவேயில்லாமல் ஆசைப்படுவது நமது இயல்பு, ஏனெனில், நாம் தொடர்ந்து மற்றவர்களிடம் இருப்பதைப் பார்த்து, அவையனைத்தும் நமக்கு வேண்டும் என்று விரும்புகிறோம். நீங்கள் இப்பொழுது இந்த உண்மையை ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம்.



ஆனால் ஆழ்ந்து ஆராய்வீர்களானால் இது உண்மையென்பதைக் காண்பீர்கள். உங்கள் மனம் மிகவும் தந்திரமாகவும் சாத்வீர்மாகவும் செயற்படுவதால் உங்களால் இதை முதல் தடவையிலேயே ஏற்றுக்கொள் முடியாது.

உதாரணமாக நீங்கள் உங்கள் வீட்டிற்கு மின் விசிறி வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்கள். ஆனால் வழியில் சில நண்பர்களைச் சந்திக்கிறீர்கள். அவர்கள் வேறு கடைகளில் வேறு சில பொருட்களை வாங்கப் போவதாகச் சொல்கிறார்கள். உடனே, உங்களுக்கும் அவற்றை வாங்க வேண்டும் என்ற ஆசை வந்து விடுவதால் உங்கள் பாதையை மாற்றிக்கொண்டு அவர்களுடன் சென்று அவற்றை வாங்குகிறீர்கள். பிறகு உங்களுக்குத் தேவையான மின்விசிறியை வாங்குவதற்குப்போதிய பணம் இல்லை என்பதை உணர்கிறீர்கள்!

நீங்கள் ஒப்பிட ஆரம்பித்துக் கொண்டும் மற்றவர்களின் ஆசைகளை வாழ்ந்து கொண்டும் இருந்தீர்களானால் எங்கு நிற்கிறீர்கள்! என்பதை தெரியாததால் ஆழமான தொல்லையில் மாட்டிக்கொள்வீர்கள். எப்பொழுதும் உங்களுடைய சொந்த அளவுகோலைக் கொண்டு உங்களை அளந்து கொள்ளுங்கள், ஒருபோதும் மற்றவர்களின் அளவு கோல்களைக் கொண்டு அல்ல. அது மிகவும் முட்டாள்தனமான மற்றும் அபாயகரமான காரியம். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி





### பெண் வீட்டாரிடம் வித்தியாசமான வரதட்சணை கேட்ட மணமகன் ஊர்கூடி வாழ்த்திய அதிசயம்

அரியானா மாநிலத்தில் நடந்த திருமணம் ஒன்றில் வித்தியாசமான முறையில் வரதட்சணை கேட்ட மணமகனை ஊர்மக்கள் ஒன்றுகூடி வாழ்த்தியுள்ளனர்.

திருமண சந்தையில் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுக்க, லட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டிய சமூக நிர்பந்தம் நிலவுகிறது.

இந்நிலையில் அரியானா மாநிலம், ஹிசார் மாவட்டம் பர்வாலா கிராமத்தைச் சேர்ந்த சுதேந்திரா ஆசாத் என்ற ஆசிரியர்.

விதிவிலக்காக தனது திருமணத்தையே சமூக மாற்றத்திற்கான ஆரம்பமாக வித்திட்டுள்ளார். இவருக்கு, கடந்த வாரம் திருமணம் நடந்தது.



இவர் திருமணத்திற்கு முன் பெண் வீட்டாரிடம் தனக்கு வரதட்சணை வேண்டும் என கேட்டுள்ளார்.

இதனை கேட்டு அதிர்ச்சியடைந்த பெண் வீட்டார், வரதட்சணையாக அவர் கேட்ட பொருளை தெரிந்ததும் ஆச்சர்யமடைந்துள்ளனர்.

அவர் தனது திருமணத்தில் பெண் வீட்டாரிடம் இருந்து வரதட்சணையாக 1,000 மரக்கன்றுகளை கேட்டு பெற்றுள்ளார். அதை தனது ஊரிலும், மணமகள் அனிதா ஊரிலும் நடவு செய்து தாங்கள் கிராமத்தை பசுமையாக்க முடிவு செய்துள்ளார்.

மேலும், திருமணத்தின் போது வழக்கமாக ஏழுமுறை அக்னியை வலம் வருவார்கள். ஆனால், இவர், பெண் சிசுக்கொலையை கண்டிக்கும் விதமாக, தனது மனைவியுடன் எட்டாவது முறையாக வலம் வந்துள்ளார்.




### உருளைக்கிழங்கு சப்ஜி



**தே.பொருட்கள்:**

உருளைக்கிழங்கு - 500 கிராம் (சிறியது மற்றும் நறுக்கியது)
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 டீஸ்பூன்
அரைத்த தக்காளி - 2 டேபிள் ஸ்பூன்
தயிர் - 2 டேபிள் ஸ்பூன்

பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை, மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன், மிளகாய் தூள் - 2 டீஸ்பூன், சீரகப் பொடி - 1 டீஸ்பூன், மல்லி தூள் - 1 டீஸ்பூன், சர்க்கரை - 1/2 டீஸ்பூன், உப்பு - தே.அளவு, எண்ணெய் - தே.அளவு

**செய்முறை**

முதலில் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பெருங்காயத் தூள் மற்றும் சர்க்கரை சேர்த்து, தீயை குறைவில் வைத்து கிளறி விட வேண்டும். சர்க்கரையானது கரைந்து, பொன்னிறமானதும், இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து சில நொடிகள் வதக்க வேண்டும். பின்பு அரைத்த தக்காளி, மஞ்சள் தூள், மிளகாய் தூள், சீரகப் பொடி, மல்லி தூள் சேர்த்து, 2 நிமிடம் கிளற வேண்டும். பின் உருளைக் கிழங்கு சேர்த்து 2 நிமிடம் தீயை குறைவில் வைத்து வதக்கி, தயிர் சேர்த்து மீண்டும் 2 நிமிடம் கொதிக்க விட வேண்டும். பிறகு தே.அளவு உப்பு மற்றும் 1/2 கப் வெதுவெதுப்பான நீர் ஊற்றி, தீயை குறைவில் வைத்து, தட்டு கொண்டு மூடி, 10 நிமிடம் நன்கு கொதிக்க விட வேண்டும். உருளைக்கிழங்கானது நன்கு வெந்ததும், அடுப்பை அணைத்து விட வேண்டும். இப்போது சுவையான உருளைக்கிழங்கு சப்ஜி ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெசாக் வெளிச்சக் கூட்டுப்போட்டி

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். சர்வ மதக்குழுவினால் யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வெளிச்சக்கூடுகள் அமைக்கும்போட்டி நடத்தப்படவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளுக்கு வெசாக்கூடு செய்வதற்கான மூலப் பொருட்கள் வழங்கப்படும் எனவும் குறித்த பாடசாலைகள் மேமாதம் 2,3,4 ஆம் திகதிகளில் பாடசாலை முகப்பில் வெளிச்சக் கூடுகளை காட்சிப்படுத்தவேண்டும் எனவும் குறித்த காட்சிப்படுத்தல்களை நடுவர்கள் வந்து பார்த்து புள்ளிகள் இடுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முதற்பரிசாக 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளதோடு எதிர்வரும் ஜுன்மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் வைத்து சர்வமதத் தலைவர்களால் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் ஆரம்பப் பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் பிறந்தநாளை முன்னிட்டு நிகழ்வு

வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகர் பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் பிறந்த தினத்தினை வாழும் கலை நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை இவ்வாண்டு மே 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடவுள்ளது.

குறித்த நிகழ்வில் மே பதின்மூன்றாம் திகதியில் பிறந்து பிறந்த நாளினை கொண்டாடும் யாழ்.மாவட்டத்தில் வசிப்பவர்களை கௌரவிக்க தீர்மானித்துள்ளது.

எனவே குறித்த தினத்தில் பிறந்தவர்கள் தங்களின் அல்லது தங்கள் பிள்ளைகளின் பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் பொருட்டு பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதியை தங்களின் தொலைபேசி இலக்கம்,சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை வாழும் கலை நிறுவனம், இல.254, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 2015 மே ஆறாம் திகதிக்கு முன்பாக அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ


## இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி

நடாத்தும்

## இயல் இசை நாடக விழா- 2015

இடம்:-இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம்
காலம்:- 30.04.2015-04.05.2015 நேரம்:- பி.ப. 4.00 மணி
30.04.2015 முதலாம் நாள்

02.05.2015 மூன்றாம் நாள்

**தலைவர்**
**திரு. ந. கணேசமூர்த்தி**
(தமிழாசிரியர்- கோண்டாவில் இந்துக் கல்லூரி)

**பிரதம விருந்தினர்**
**ஈஸ்வரபாதம் சரவணபவன்**
(பாராளுமன்ற உறுப்பினர்- யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டம் உதயன் குழுமத் தலைவர்)

**நாச்சிமார் கோவிலடி பிரபா குழுவினர் வழங்கும்**
**மங்கல இசை**
**நாதஸ்வரம்**
திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
திருமதி சோபனா பாலகிருஷ்ணன்
**தவில்**
திருமதி புஸ்பராணி
திருமதி செல்வநாயகம்

**மங்கல விளக்கேற்றல்**
**திரு. சு. நீலமேகன் (சண்முகம்)**
உரிமையாளர்- (சண்முகம் சைவ உணவகம்)
**திரு. சு.பாஸ்கரன்**
(உரிமையாளர் -பாஸ்கரன் சிற்பாலயம்)
**திரு. வீ.சிறிதரன்**
(உரிமையாளர்- சிறிராம் நகைமாடம்)

**தேவாரம்:** சி.பாணுஜா, சி.பவித்திரா, மி.டிலக்சனா, ந.அகழினி
(சாரங்கம் இசை மன்ற மாணவிகள்)

**ஆசியுரை**
**செ.அன்புராசா அடிகளார்**
(அதிபர், புனித வளனார் குருமடம் கொழும்புத்துறை)

**வாழ்த்துரை**
**திரு. வி. கருணலிங்கம்**
(அதிபர் , கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

**இசை விருந்து**
பாட்டு: ஸ்ரீமதி கனகாம்பரி சிவனேஸ்வரநாதன்
வயலின்: திரு. அ. ஜெயராமன்
மிருதங்கம்: திரு. சி. துரைராஜா
மோர்சிங்: திரு. க. நந்தகுமார்
கடம்: திரு. சதா வேல்மாறன்

**கவியரங்கம்**
"வசந்தம் இன்று நம் வாசலில் வந்தது"
(தலைவர்)
**கவிஞர் சோ. பத்மநாதன்**
"பங்கு பற்றும் கவிஞர்கள்"
கவிஞர் கதிரேசப்பிள்ளை தர்ஷனன்
கவிஞர் திருமதி மாலாதேவி மதிவதனன்
கவிஞர் திரு. நாக.சிவசிதம்பரம்
கவிஞர் திரு. இ.சு.முரளீதரன்

ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவிகள் வழங்கும்
**நாட்டிய அர்ப்பணம்**
நட்டுவாங்கம்: ஸ்ரீமதி பாலினி கண்ணதாஸ்
பாட்டு : திரு. தவநாதன் றொபோட்
வயலின் : திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம்: நல்லை G. கண்ணதாஸ்

*கலைஞர்கள் கௌரவிப்பு*
*பிரதம விருந்தினர்*
**கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினர் வழங்கும்**
**பூதத்தம்பி (இசைநாடகம்)**
நன்றியுரை

## கிருபா லேணர்ஸ்

Reg-ds589
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Hotine:077 722 5292
021 222 4353, 021 492 3200
சுன்னாகம்:- 021 224 2022
சாவகச்சேரி:- 021 227 0700
நெல்லியடி:- 021 300 6550
பருத்தித்துறை:- 021 492 3201
யாழ். கச்சேரி அருகாமை:- 076 722 5292
வவுனியா:- 024 222 7777, 077 710 0444
மன்னார்:- 023 225 1656
கிளிநொச்சி:- 021 228 5505
விசுவமடு:- 021 320 1515
முழங்காவில்:- 021 300 6544
பூநகரி:- 021 320 1818

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 83 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4409

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22 சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4412

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 46 1/2 செவ் 4 இல்
உயரம்: 173cm
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4415

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 63சூரி செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSC IT/ பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: B/4416

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 5 3/4
உயரம்: 168cm
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/4410

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 87 செவ் 8 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/4411

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 31 3/4
உயரம்: 155cm
தகைமை/தொழில்: Dip in IT/ தனியார் தொழில் லண்டன் PR
தொ.இ: G/4413

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 18 1/4
உயரம்: 156cm
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
தொ.இ: G/4414

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

02.05.2015
(சித்திரை 19, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி காலை 6.55 மணிவரை
அத்தம் காலை 7.02 மணிவரை
இராகுகாலம் 8.57-10.27 மணிவரை
சுபநேரம் 2.57-4.27 மணிவரை
சித்திரைச் சித்திரை

வளவன்

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும்நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** குடும்பத்தாரின் பேரன்பைப் பெறுவீர்கள், எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, தனவரவு திருப்திகரமாக அமையும்.

**மிதுனம்** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், வாகன பழுதுச் செலவுகள் குறையும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** பொருளாதார வளர்ச்சி கூடும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்,சுப செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** சுப விரயங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், உடல் நலன் சீராகும், விரும்பிய காரியங்களை நிறைவேற்றுவதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** தொழிலில்புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், ஆதாய [illegible] அலைச்சல்கள் ஏற்பட [illegible] உறவினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், வெற்றிகரமான தகவல் [illegible] உறவினர் [illegible] போசன சுகமுண்டு.

**தனுசு** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தேகநல னில் இருந்த பாதிப்புக்கள் அகலும், போசன சுகமுண்டு மங்கையர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேகநலனில் தெளிவு பிறக்கும், தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைப்பீர்கள், நீண்ட நாளைய பிணக்குகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கும்பம்** வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, தேகநல னில் கவனம் தேவை, திருட பயமுண்டு.

**மீனம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், கௌ வமான நாள்,கொடுத்த வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள் வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாதரவத்தையில் கசிப்பு விற்பனையை கட்டுப்படுத்த 7பேர் கொண்ட குழுவினர்

## கோப்பாய் பிரதேச செயலர் நடவடிக்கை

(நல்லூர்)

**வாதரவத்தைப் பகுதியில் கசிப்பு விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு 7 பேர் கொண்ட குழுவினை அமைக்க சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் மா. பிரதீபன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.**

கோப்பாய் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வாதரவத்தை பகுதி யில் கசிப்பு விற்பனை அதிகரிப்பதை தொடர்ந்து அக்கசிப்பு விற்பனையை ஒழிப்பது தொடர்பாக அப்பகுதி கிராம சேவையாளர் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவை நியமிக்க வேண்டுமென கிராம சேவையாளருக்கு பிரதேச செயலாளர் அறிவுறுத்தினார்.

மேலும் இப்பகுதியில் ஏற்கனவே கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் எனவும் இக்கசிப்பு வெளி மாவட்டத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வாதரவத்தைப் பகுதியில் விற்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (இ-134)

# தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சித்திரா பூரணை தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5.45 மணியளவில் விசேட அபிஷேகமும் பூசைகளும் காலை 7மணிக்கு வசந்த மண்டப பூசைகளும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து காலை 8மணியளவில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ-3)

# கல்வி நியதிச்சட்டம் சிறுதிருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது

வடக்கு மாகாண சபையின் 2015ஆம் ஆண்டு 2ஆம் இலக்க கல்வி நியதிச்சட்டம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு சிறு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 28 ஆவது மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நேற்றுதினம் நடைபெற்றது. இவ் அமர்வின் போதே வடக்கு மாகாண கல்வியமைச்சின் நிதி நியதி சட்டம் கல்வி அமைச் சரினால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்வி நியதிச்சட்டத்தின் இரண்டாம், மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது குழுநிலைக்கு மாறிய சபையில் விவாதிக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சபையில் குறித்த நியதிச்சட்டம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. குறித்த சட்டத்தினை ஏற்குமாறு கல்வி அமைச்சர் குருகுலராசா சபையில் தெரிவிக்க எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா நியதிச்சட்டத்தை வழிமொழிந்தார்.

இக் கல்வி நியதிச்சட்டத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்தல், இடமாற்றங்கள், தண்டனை இடமாற்றங்கள், கல்வித திணைக்களங்கள் மீதான நடவடிக்கைகள் தொடர்பிலும் இந் நியதி சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-4)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் ஸ்ரீ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்கள் மற்றும் யாழ்.பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் அனைவரையும் பங்குபற்றுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (இ-3)

# போக்குவரத்து விதிமுறைகளை ஒழுங்குபடுத்துமாறு அறிவுறுத்து

போக்குவரத்து விதிமுறைகளை ஒழுங்குபடுத்தவும் அவற்றை உரிய வகையில் நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுக்குமாறு நெல் லியடி போக்குவரத்து பொலிஸ் உத்தி யோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட மேற்படி பொலிஸ் உத்தியோகத்தரிடம் பாடசாலை நேரங்களில் மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பாதசாரி கடவைகளில் பொலிஸாரின் பணிகளை ஒழுங்குபடுத்துமாறும் மற்றும் பாதசாரிகள் கடவைகள் அமைக்கப்பட வேண்டிய பகுதிகளில் அவை இதுவரை அமைக்கப்படாமையால் ஏற்படக் கூடிய விபத்துக்களை விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு அதனைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தேவையற்ற இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆட்டோக்கள் மற்றும் இளைஞர்களின் மோட்டார் சைக்கிள் தரித்து நிற்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் இளைஞர்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-3-60)

# தேர்த்திருவிழா இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் திருவருள்மிகு ஸ்ரீ கந்த சுவாமி கோவில் திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் தேர்த்திருவிழா இன்று 2 ஆம் திகதி காலை 8.45 மணிக்கு இடம்பெறும்.

நாளை தீர்த்தத்திருவிழா முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். (இ

## தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதை எதிர்த்து

# வடமாகாண சபையில் கண்டனத் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

ஆந்திர பொலிஸாரினால் இருபது தமிழர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மிலேச்சத்தனமான சம்பவத்திற்கு வடக்கு சபையில் கண்டனத்தீர்மானம் முதலமைச்சரினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் இ28 ஆவது அமர்வு நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த மாதத்தின் இரண்டாம் வாரத்தில் இந்தியா ஆந்திரமாநிலம் திருப்பதிக்கு அருகில் 20 தமிழர்கள் செம்மரக் கடத்தலுடன் தொடர்புள்ளவர்கள் என்று கூறி ஆந்திர செம்மரக் கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸாரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் மாதாந்த கூட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டு குறித்த செயற்பாட்டிற்கு கண்டனமும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர்சி.வி. விக்கினேஸ்வரன், 20 தமிழர்கள் எதுவித விசாரணையும் இன்றி சுட்டுக்கொலை செய்யப்பட்டதனால் அங்கு தொடர் பதற்றம் நிலவியது. அத்துடன் இவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினால் தானா விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சந்தேகம் எழுகின்றது.

இந்த செயற்பாடு கடந்த காலங்களில் இலங்கையில் இடம்பெற்ற அழிவுகளையும் சம்பவங்களையும் நினைவுபடுத்துகின்றது. எனவே இவ்வாறான செயற்பாட்டினை அப்பாவி தமிழ் மக்கள் மீது மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல் செயற்பாட்டிற்கு வடக்கு மாகாண சபை கண்டனத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

அத்துடன் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வடக்கு மாகாண சபையாகிய நாம் அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முதலமைச்சரின் இக்கண்டன தீர்மானம் சபையின் ஏகோபித்த ஆதரவுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (இ-4)




# விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

ஹெரொயின் வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு இளைஞர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு இளைஞர்கள் கடந்த மாதம் 8ஆம் திகதி 68 மில்லிகிராம் மற்றும் 85மில்லி கிராம் ஹெரொயின் வைத்திருந்த குற்றத்திற்காக யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 9ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தி வழக்கு தொடரப்பட்டு அன்றையதினம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சரோஜினி இளங்கோவனால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்தவர்களை வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அன்றையதினமே பிணையில் விட்டது பாரிய தவறு என்று சுட்டிக்காட்டிய யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் அவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை இரத்து செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய கட்டளை இட்டார்.

அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் கைவிரல் அடையாளத்தை பெற்று தண்டனை தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வழக்கு நடத்த அன்று யாழ்.பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி மன்றில் சமுகமளித்து இருந்தும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிணையை எதிர்க்காமை தவறு என்று சுட்டிக்காட்டிய நீதவான் அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

யாழ்மாவட்டத்தில்கஞ்சா,ஹெரோயின் பாவனை அதிகரித்ததுடன் இளைஞர்கள் மட்டும் அல்லாமல் பாடசாலை மாணவர்களும் அடிமையாகி உள்ளனர். இந்தநிலையில் பொலிஸார் இவற்றை கட்டுப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கஞ்சா, ஹெரோயின் தொடர்பாக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் யாழ்.மாவட்டத்தில் இவற்றை விநியோகிப்பது யார்,விற்பனைகள் எங்கு நடைபெறுகின்றன, எங்கிருந்து வருகின்றன என்பது தொடர்பாக இதுவரை எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி இது தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்குமாறு வட மாகாண பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை இடுவதாகவும் இக்கட்டளை உடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (இ-9)

# யாழ்.துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்புப்பணி இவ்வருடம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதி உதவியுடன் நடைபெற்று வரும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கின் புனர்நிர்மாணப் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடையும் என இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் 145 மில்லியன் ரூபாய் செலவில் கடந்த வருடம் துரையப்பா விளையாட்டு அரங்கின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

கடந்த வருடம் சீரற்ற காலநிலை மற்றும் மைதானத்தை பல நிகழ்வுகளுக்காக பலர் பயன்படுத்திய காரணமாக புனரமைப்பு பணிகள் சீராக மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வருடத்தில் இருந்து விரைவாக பணிகள் இடம்பெற்று வருகின்றது. வாரத்தில் ஒரு தடவை இந்த வேலைகளை கண்காணித்து வருகின்றேன்.

மிக விரைவாக வேலைகள் நடைபெற்று வருவதால் இந்த வருட இறுதிக்குள் புனரமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இப் புனர்நிர்மாணப் பணிகளில் பார்வையாளர் அரங்குகள், சர்வதேச தரத்திலான தடகளப்பாதை, விளையாட்டரங்கில் கழிவறை, கழிவு நீர் கால்வாய்கள், தானியங்கி நீர் தெளிப்பான்கள் பற்கள் என்பன அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசில் அமைச்சராக செயற்படுவதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லை

## சட்டத்தரணி ஜயம்பதி கூறுகிறார்

(கொழும்பு)


பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ கிறீன் கார்ட் உடையவர் என்பதனால் அமைச்சர் பதவி பெறுவதற்கு சட்டரீதியான தடைகள் எதுவும் இல்லை என சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

19ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கமைய இரட்டை பிரஜாவுரிமை கொண்டுள்ள ஒருவர் பாராளுமன்ற அமைச்சராக செயற்பட முடியாதென சட்டம் கொணடு வரப்பட்டது.

இதற்கமைய பசில் ராஜபக்ஷ இரட்டை பிரஜாவுரிமை கொண்டுள்ள ஒருவர், அமைச்சராக செயற்பட முடியாதென பாராளுமன்றத்தில் விவாதிக்கும் நிலை உருவாகியது.

குறித்த சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, பசில் ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

இருப்பினும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இரட்டை பிரஜாவுரிமை கொண்டுள்ளமையினால் அவருக்கு பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)




# மகிந்தவின் அரசியல் மீள்வருகை முயற்சிக்கு பெரும் பின்னடைவு

## இந்தியன் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டு

The Indian EXPRESS
JOURNALISM OF COURAGE

மகிந்த ராஜபக்ஷவின் அரசியல்மீள்வருகை முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை நாடாளுமன்றம் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல மீள்வருகை முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பின் 19 வது திருத்தம் அவர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதையும் தடை செய்துள்ளது. மக்களால் இரு தடவைகள் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் பின்னர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியை பெறமாட்டார் என 19 திருத்தம் தெரிவிக்கின்றது. மேலும் மகிந்த ராஜபக்ஷவை மேலும் பலவீனப்படுத்தும் விதத்தில் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் 19 வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள் ளன.

இந்த இரு கட்சிகளும் 19 வது திருத்தத்தை குழப்புவதற்கு இறுதி நிமிடம் வரை பல முயற்சிகளை மேற கொண்டன. பல ஆட்சேபனைகளை முன்வைத்தன. பாராளுமன்றத்தில் அவர்களுக்கு காணப்பட்ட பெரும்பான்மையே அவர்களது துரும்புச் சீட்டாக காணப்பட்டது. அவர்களது ஆதரவு இல்லாமல் ஜனாதிபதி சிறிசேனவினால் அவரிற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றிருக்க முடியாது.

எனினும் இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கப்பாட்டிற்கு வந்தனர். ஜனாதிபதிக்கு அளவுக்கதிகமான அதிகாரங்க ளை வழங்குவதை வாக்காளர்கள் விரும்பவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர். தேர்தல் பிரசார காலத்தில் சிறிசேன இதனையே அதிகம் வலியுறுத்தியிருந்தார்.

2001 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசகட்டமைப்புகளின் செயற்பாடுகளை கண்காணிக்க சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் யோசனையை முன்வைத்தது. 19 திருத்தம் அதனையே செய்கின்றது என பிரதியமைச்சர் எரான் விக்கிரமரட்ன சுட்டிக்காட்டினார்.

இதுதவிர அரசியல் ரீதியிலான ஆபத்துக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்பட்டன, அவற்றை அவர்களால் புறக்கணிக்க முடியாத நிலை காணப்பட்டது. பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலை நடத்தப்போவதாக எச்சரித்த ஜனாதிபதி 19 வது திருத்தத்திற்கு ஆதரவளிக்காதவர்களுக்கு மீண்டும் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படாது என தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதியில் 19 வது திருத்தத்திற்கு ஆதரவளிக்க இணங்கினர். ஆனால் அதற்கு முன்னர் அவர்கள் அரசமைப்பு சபைக்கு பெருமளவிற்கு சுயாதீன நபர்களையே நியமிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகளை குழப்பினர். இறுதியில் அந்த சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பதாக அவர் இணங்கினார் என அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

### மாடு பிரச்சினையால் ஒருவர் சுட்டுக்கொலை

ஹொரனை கொஸ்வத்தையில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த சம்பவம் நேற்றுக்காலை 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் வெதகே நந்தன குமார என்பவர் பலியானதுடன் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதாக கூறப்படும் சந்தேக நபர் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகிவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துக்கு மாடு பிரச்சினை காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸ் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது. (இ-5)


# கம்பன் விழா - 2015 இரண்டாம் நாள் நிகழ்வு

கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா -2015, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும் காலை, மாலை அமர்வுகளாக மே முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை நடத்தப்படுகிறது.

இந்த விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வின் காலை அமர்வு 9.30 மணிக்கு இரா.பாலசுப்பிரமணியம் தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.

திருமதி ஹம்சானந்தி தர்மபாலனின் கடவுள் வாழ்த்து இடம்பெற்று புதுவைக் கம்பன் கழகத்தின் இணைச்செயலாளர் இ.கலியாண சுந்தரத்தின் தலைமையுரையைடுத்து தமிழ்த்தென்றல் அலி அக்பரின் தொடக்கவுரை இடம்பெறும்.





இதேவேளை புலவர் இரெ. சண்முக வடிவேலின்(தமிழ்நாடு) 'கங்கை வேடன்' என்னும் பொருளில் இலக் கியப் பேருரை இடம்பெறும்.

'இராமனின் புகழைப் பெரிதும் ஓங்குவிக்கும் தொடர்..' என்னும் பொருளில் நடுவர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் (தமிழ்நாட்டு முன் ... இடம்பெறும். இதில் ... டுக!' -கு.அசோக்பரன், 'பின்னவன் பெற்ற செல்வம்' -ஜெ.ஜெயராம், 'சிந்தையாலும் தொடேன்' -ந.ஐங்கரன், 'நின்னொடும் எழுரானோம்' -தெ.ஹர்சன், 'நீ இது பொறுத்தி!' -இ.சர்வேஸ்வரா, 'போர்க்கு நாளை வா!' -அ.வாசுதேவா ஆகியோர் வாதிடுவர்கள்.

மாலை அமர்வு என்.எஸ் வாசு தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். பி.நித்தியானந்தனின் கடவுள் வாழ்த்தை தொடர்ந்து புதுவைக் கம்பன் கழகத்தின் செயலாளர் 'கம்ப காவலர்' தி.முருகேசன் தலைமையுரை நிகழ்த்துவார்.

இதனையடுத்து அஞ்சலியரங்கு இடம்பெறும் அதேவேளை இறுதி நிகழ்வாக பட்டிமண்டபம் இடம் பெறும்.

'கற்றோரைப் பெரிதும் கலங்கச் செய்யும் பிரியாவிடை' என்னும் பொருளில் 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ் இதில் நடுவராக செயற்படுவார்.

'இராவணனிடம் கும்பகர்ணன் பெற்றது' -த.இராமலிங்கம், தி.திருநந்தகுமார்.

'கும்பகர்ணனிடம் வீடணன் பெற்றது' -பு.சி.கணேசன், த.சிவகுமாரன். 'இராவணனிடம் இந்திரஜித் பெற்றது!' இரெ.சண்முகவடிவேல், க.குமாரதாசன் ஆகியோர் வாதிடுவார்கள். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபோவஸ்வேவ பகுதியில்

# வெளிமாவட்டங்களை சேர்ந்த 5ஆயிரம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி ஆதங்கம்

**(குருமன்காடு)**

**வவுனியா, கலபோவஸ்வேவ பகுதியில் அம்பாந்தோட்டை, காலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் குடி யேற்றப்பட்டுள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**



வவுனியா மாவட்ட செயலகம் முன்னால் பாரதிபுரம், விக்ஸ்காடு பகுதி மக்கள் காணி உறுதி கோரி ஆரப்பாட்டம் நடத்திய போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கை யிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

வவுனியா, பாரதிபுரம் விக்ஸ் காட்டுப் பகுதியில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த காணிகளற்ற மக்கள் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக குடியிருக்கின்றார்கள். அவர்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் இன்னும் வழங்கப்படவில்லை. மீள்குடியேற்றத்திற்கான எந்தவித உதவிகளும் கிடைக்காத நிலையில் வறுமைக் கோட்டின்கீழ் தமது பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த அதிகளவிலான மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். குறிப்பாக கலாபோவஸ்வேவ பகுதியில் காலி, அம்பாந்தோட்டையில் இருந்து அழைத்து வரப்பட்ட 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

செட்டிகுளம்,பாவற்குளம் கிராமத்தில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்த மக்களை அங்கிருந்து வெளியேற்ற முயற்சிகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அமைச்சர் ஒருவரினால் இம் மக்கள் குடியிருக்கும் பகுதியில் தொழிற்சாலை அமைக்கப் போவதாக கூறி இவர்களை வெளியேற்ற முயற்சிகளைச் செய்தார். எனினும் அரச அதிகாரிகளுடன் பேசி அது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த மக்களை அப் பகுதியிலேயே குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே, அரசாங்கம் இம் மக்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி அவர்களுக்கான காணி கலை வழங்கி அவர்களும் சராசரி மனிதா களாக வாழ வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (2-250)




# வவு.நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற மக்களை குடியேற்ற காணிகள் ஒதுக்கீடு

(வவுனியா)

வவுனியா நலன்புரி நிலையங்களான சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற மக்களுக்கு அதே இடத்தில் காணிகள் வழங்கப்படுமெனவும் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற மக்களுக்கு வவுனியா வடக்கு சின்னடம்பன் பகுதியில் குடியற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண புனர்வாழ்வு சிறுவர் நன்னடத்தை அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வடக்கு அமைசசர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி முகாம்கள் இதுவரை மூடப்படாதுள்ளமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. அவ்வப்போது தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் மட்டும் மக்களுக்கு வழங்கப்பட்டு பின்னர் முடிவெதுவுமின்றி அநாதரவாக மக்கள் விடப்பட்டனர். வடக்கு மாகாண சபை நிறுவப்பட்ட பின்னர் மாகாண சபையில் இம்மக்களை அதேஇடத்தில் காணிகளை வழங்கி குடியேற்றம் செய்யப் படவேண்டுமென்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டதுடன் கடந்த வருடம் நடைபெற்ற மாவட்ட ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன் மொழிவொன்றும் என்னால் முன் வைக்கப்பட்டு இணைத் தலைவர் களால் அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த அரசாங்கத்தில் இது தொடர்பாக எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் எமது மாகாண அமைச்சர்கள் முதலமைச்சர் தலைமையில் மத்திய மீள்குடியேற்ற அமைச்சரை சந்தித்து இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தோம்.

அமைச்சர் அவர்களும் இந்த விடயத்தில் கரிசனை கொண்டு அமைச்சின் உயரதிகாரிகளை வவுனியாவுக்கு அனுப்பி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கூட்டமொன்றை ஒழுங்குபடுத்தி இந்த பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி தீர்மானம் நேற்று முன்தினம் எடுக்கப்பட்டது. இவர்களுக்கான வீடுகள் லைக்கா நிறுவனத்தினால் கட்டிக் கொடுப்பதற்கு மாவட்ட செயலகத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு காணிகள் பகிர்ந்த ளிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கான மீள்குடியேற்ற உதவிகளையும் தொடர்ந்து வழங்க ஆவன செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன் என அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வவுனியா வடக்கு கல்விவலயம் கஷ்ட பிரதேசமாக பிரகடனம்

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட வவுனியா வடக்கு கல்வி வலயத்தை கஷ்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தும் பிரேரணை வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 28 ஆவது மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையில் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்தலைமையில நடைபெற்றது. ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் இந்தப் பிரேரணையை முன் வைத்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடக்குக்கு விஜயம் செய்யும் போது, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள கல்வி வலயங்களை கஷ்ட பிரதேசங்களில் கல்வி வலயமாக பிரகடனப்படுத்தினார். அதே போல் வவுனியா வடக்கு கல்வி வலயத்தையும் கஷ்டபிரதேச கல்வி வலயமாக பிரகடனப்படுத்த வேண்டும் என லிங்கநாதன் பிரேரணை ஒன்றை நேற்று முன்தினம் முன் வைத்தார்.

இந்தப் பிரேரணை முன்வைத்ததும் எழுந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாணத்தில் சில நடவடிக்கைகளை ஏன் செய்கின்றார் என்பது எங்களுக்கு வளங்கவில்லை. அவரது கட்சி அலுவலகம் திடீரென கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சில நடவடிக்கைகளையும் செய்தார்.

மக்களே உங்களுக்காக செய்கினறோம் எங்களுடன் வாரு ங்கள என்று அழைப்பது போல அவரது நடவடிக்கை இருக்கின்றது. இது அரசியல் நோக்கமாக இருக் கும் என்று நினைக்கின்றேன் என்றார். இந்தப் பிரேரணையை நான் எதிர்க்க வில்லை. வவுனியா வடக்கு கல்வி வலயம் கஷ்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படும் என்றார். (2-4)

# வெசாக் வாரத்தை முன்னிட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட அதிரடி படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரின் ஏற்பாட்டில் வெசாக் வாரத்தை முன்னிட்டு குஞ்சுக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வெசாக் அலங்காரப் பந்தலில் வைத்து நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பாடசாலை மாணவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் மாற்றுத் திறனாளிகளாகவுள்ளவர்கள் ஆகியோருக்கு பாடசாலை உபகரணங்கள் வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய குஞ்சுக்குளம் கிராமத்தில் உள்ள குஞ்சுக்குளம் பண்டாரவன்னியன் வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் இதே கிராமத்தைச் சேர்ந்தபுணர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் மாற்றுத் திறனாளிகளகவுள்ளவர்களுக்கு ஊன்று கோல்களும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில்நல்லினகறவைப்பசுக்களும் விசேட அதிரடி படை பொறுப்பதிகாரியினால் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

# துணுக்காய் கல்வி வலயத்தில் பதவி நிலை வெற்றிடங்கள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் நிலவுகின்ற ஆரம்ப கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் மற்றும் மாந்தை கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் வடக்கு மாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச் சின் செயலாளர் இ.ரவீந்திரனால் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய ஆங்கிலம் ஆரம்பக்கல்வி ஆகிய பாடரீதியான உதவி கல்விப்பணிப்பாளர் பதவிக்கு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு,வடக்கு மாகாணத்தில்கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாகசேவை-III (பொது) ,இ.கஃநிர்வாக சேவை II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் மற்றும் அதிபர் சேவையினைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சேவை தொடர்பான நிபந்தனைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தை பெற்று பூரணப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளி க்கிழமைக்கு முன்பாக செயலாளர், கல்வி அமைச்சு,வடக்குமாகாணம்,செம்மணி வீதி,நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுமூலம் அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீசிய மினி சூறாவளியினால் கூரைகள் காற்றில் எகிறின





கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள பன்னங்கண்டி ,வட்டக்கச்சி மாவடி,அம்மன் புதுக்காடு ,மாயவனூர் ஆகிய கிராமங்களில் நேற்றுமுன்தினம் மாலை 4.30மணியளவில் மினி சூறாவளியுடன் கூடிய மழை பெய்துள்ளது. இதன்போது பன்னங்கண்டி கிராமத்தில் தகரங்களினால் அமைக்கப்பட்ட 5 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன் பயன்தரும் வாழைமரங்கள் வீசிய காற்றினால்முறிந்தன.

வட்டக்கச்சி மாவடி அம்மன் புதுக்காட்டுப்பகுதியில் சீற்றினால் அமைக்கப்பட்ட 11 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன் இரண்டு கடைகளின் கூரைகள்சேதமடைந்தன.

மாயவனூர் கிராமத்தில் ஏழு வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் இரண்டு வீடுகள்பகுதி சேதத்திற்குள்ளாகின.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவினர் அனர்த்தம் நடைபெற்ற கிராமங்களிற்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் சேத விபரங்களுக்கு ஏற்ற வகையில் உதவிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)

## வடமாகாண சபை உறுப்பினராக கந்தையா சிவநேசன் நியமனம்

(முள்ளியவளை)

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினரான வி.கனகசுந்தரசுவாமிஅண்மையில் காலமானதை அடுத்து அவரது வெற்றிடத்துக்கு கந்தையா சிவநேசன் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.



இதுகுறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் த.தே. கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு அடுத்த அதிக படியான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டபுளொட்அமைப்பைச்சேர்ந்த பவன் என்று அழைக்கப்படும் கந்தையா சிவநேசன் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ .டபிள்யூ. மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். (2-302)




# வன்னியில் நடைபெற்ற மே தின எழுச்சி






தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் மே தின ஊர்வலம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் தருமபுரம் நகரப்பகுதியில் கூட்டம் நடத்தப்பட்ட இடத்தில் முடிவு பெற்ற போது...

படங்கள்: கிளிநொச்சி-1 செய்தியாளர்)







கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர்கள் ஒன்றிணைந்து நடத்திய மேதினக் கூட்டம் நேற்று காலை கிளிநொச்சி டிப்போ சந்திக்கருகாமையில் நடைபெற்றபோது....

(படங்கள்:- கிளிநொச்சி -1 செய்தியாளர்)








வவுனியாவில் புதிய மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின நிகழ்வு நேற்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய முன்றிலில் ஆரம்பித்து பேரணி பிரதான வீதி ஊடாக பஸார் வீதியைச் சென்றடைந்து அங்கிருந்துவவுனியா நகரசபை வளாகத்தை சென்றடைந்தபோது....

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)





முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வு நேற்று புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஊர்திகள் சகிதம் மே தின பேரணி ஆரம்பமாகி மாலதி விளையாட்டு மைதானத்தை சென்றடைந்ததும் மைதானத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோசமான தொழில்

வைசாலி நகரத்தில் சோமகுப்தன் என்ற வணிகன் வசித்து வந்தான். குறுகிய காலத்தில் அதிக முதலீடு எதுவுமின்றி ஏராளமான பொருள் சம்பாதித்து கோடீஸ்வரனாக ஆசை கொண்டான். ஆனால் எத்தகைய தொழிலில் அவ்வாறு முதலீடே இல்லாமல் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று அவன் யோசித்து வந்தான்.

ஒருநாள் நகரத்தில் ஒரு பெரிய செல்வரின் வீட்டில் லட்சக்கணக்கான பணத்தைத் திருடர்கள் வீடு புகுந்து திருடிச் சென்றனர்.

திருட்டுத் தொழிலில் முதலீடு எதுவுமின்றி ஏராளமாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்ற உண்மை அவனுக்கு அப்போது தான் விளங்கியது.

உடனே அவன் தன்னுடைய வியாபாரத்தை விட்டு விட்டு, திருட்டுத் தொழிலில் எவ்வாறு ஈடுபடுவது என்று யோசிக்கத் தொடங்கினான். சில நாட்களுக்குப் பிறகு நகர எல்லையில் உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் சில திருடர்கள் வசிக்கின்றனர் என்று தெரிந்து கொண்டு, அவர்களுடன் பரிச்சயம் செய்துகொள்ள இரவு நேரங்களில் அங்கு சென்று உறங்க ஆரம்பித்தான்.

திடீரென அந்நியன் ஒருவன் இரவு நேரங்களில் தங்கள் மறைவிடத்தில் தூங்குவது கண்ட திருடர்கள் சோமகுப்தனை ஒரு அநாதை என்றும், தமது திருட்டுத் தொழிலுக்கு அவனையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் எண்ணினர்.

ஒருநாள் இரவில், திருடர்கள் இருவர் பொதிகள் சுமக்கும் காவடிகள் கொண்டு வந்தனர். அவர்களில் குட்டையாக இருந்தவன் தூங்கிக்கொண்டிருந்த சோமனை எழுப்பி, 'தம்பி! எங்களுடைய சகா ஒருவன் இன்று வரவில்லை. அவனுக்கு பதிலாக நீ எங்களுடன் திருட வருவாயா?' என்று கேட்டான். திருட்டுத் தொழிலில் அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த சோமன் உடனே மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டான். உடனே இரு திருடர்களும் சோமனை ஒரு விவசாயி போல் வேடம் தரிக்கச் செய்தனர். பிறகு அவன்தலையில்வெல்லம் அடங்கிய ஒருமூட்டையை ஏற்றி, கையில் ஒரு கழியையும் கொடுத்தனர்.


திருட்டுத் தொழிலுக்கு இத்தனை ஏற்பனை தேவையா என்று சோமன் ஆச்சரியப்பட்டான். பிறகு அவர்கள் இருவரும் சோமனைத் தன்னுடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் நகரத்தின் பிரதான தெருக்களில் சென்றனர்.

செல்லும் வழியில் இருட்டில் படுத்திருந்த ஒரு நாயின் வாலைத் தெரியாமல் சோமன் மிதித்து விட, நாய் பயங்கரமாகக் குரைத்தது. குரைப்பு சத்தத்தைக் கேட்டதுமே, சோமன் மிகவும் பயந்து போனான்.

அவன் தலையிலிருந்த மூட்டை யிலிருந்து சிறிது வெல்லம் தரையில் விழுந்து சிதற, அதை நாய் பாய்ந்து சென்று தின்னத் தொடங்கி, தான் குரைப்பதை நிறுத்தியது.

"தம்பி! நீ திருடப் போகிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு எச்சரிக்கையாக நடந்து செல்ல வேண்டும். இப்போது இந்த சத்தத்தைக் கேட்டு யாராவது காவலன் வந்தால் ஏதாவது உளறி விடாதே! வாயை மூடிக் கொண்டிரு!" என்று உயரமான திருடன் எச்சரித்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள், அங்கு குதிரை மீது சவாரி செய்தவாறு ஒரு காவலன் தோன்றினான். அவர்களைக் கண்டதும், 'யாரடா நீங்கள்? இந்த இரவு நேரத்தில் எதற்கு தெருக்களில் திரிந்து கொண்டிருக்கிறீர்கள்?'என்று உறுமினான்... (தொடரும்)








- 1568 - ஸ்கொட்லாந்தில் லொக் லெவென் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டிருந்த முதலாம் மேரி அங்கிருந்து தப்பி வெளியேறினாள்.
- 1808 - மாட்ரிட் மக்கள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- 1814 - முதலாவது மெதடிஸ்த ஆயர் தோமஸ் கோக் தமது மதத்தைப் பரப்புவதற்காக கப்பலில் இங்கிலாந்தில் இருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.
- 1876 - பல்கேரியாவில் ஏப்ரல் கிளர்ச்சி ஆரம்பித்தது.
- 1885 - புல்ஜிய மன்னர் இரண்டாம் லெயோபோல்ட் கொங்கோ சுதந்திர நாட்டை அமைத்தான்.
- 1889 - எதியோப்பியாவின் அரசன் இரண்டாம் மெனெலிக் என்பவன் இத்தாலியுடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையின்படி எரித்திரியாவின் முழுப் பகுதியும் இத்தாலிக்குத் தரப்பட்டது.
- 1928 - அமெரிக்காவின் பிரபல கேலிச்சித்திர ஓவியரான வோல்ட் டிஸ்னி பிரபல கேலிச்சித்திரக் கதாபாத்திரமான மிக்கி எலியின் படத்தினை வரைந்தார்.
- 1933 - ஹிட்லர் தொழிற்சங்கங்களை தடை செய்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பேர்லினைத் தாம் கைப்பற்றியதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது. ஜேர்மனியப் படைகள் இத்தாலியில் சரணடைந்தனர்.
- 1952 - உலகின் முதலாவது ஜெட் விமானம், டிஹாவிலண்ட் கொமெட் 1, முதற்தடவையாக லண்டனுக்கும் ஜொகான்னஸ்பேர்க் நகருக்கும் இடையில் பறந்தது.
- 1964 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கக் கப்பல் ஒன்று குண்டுவெடிப்பில் மூழ்கியது.
- 1964 - 8,027 மீற்றர் உயர ஷிஷபங்குமா மலையின உச்சியை சீனாவின் இரு மலையேறிகள் எட்டினர்.
- 1982 - போக்லாந்து போர்: பிரித்தானியாவின் எச்.எம்.எஸ் கொன்கரர் என்ற நீர்மூழ்கிக் கப்பல ஆர்ஜெண்டீனாவின் போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- 2002 - கேரளாவில் பாலக்காடு நகரில் இடம்பெற்ற கலவரங்களில் 8 இந்துக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

- 1921 - சத்யஜித் ராய், இந்தியத் திரைப்பட இயக்குநர் (இ. 1992)
- 1969 - பிறயன் லாறா, மேற்கிந்தியத் தீவுகள் அணியின துடுப்பாளர்
- 1975 - டேவிட் பெக்காம், இங்கிலாந்து காற்பந்து ஆட்டக்காரர்
- 1983 - ஈழநிலா, ஈழத்துக் கவிஞர்

**இறப்புகள்**

- 1519 - லியனார்டோ டா வின்சி, இத்தாலிய ஓவியர் (பி. 1452)
- 2009 - கே. பாலாஜி, தமிழகத் திரைப்பட நடிகர், தயாரிப்பாளர்

## லியனார்டோ டா வின்சி



லியனார்டோ டா வின்சி 1452 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். இவர் ஒரு புகழ் பெற்ற இத்தாலிய மறுமலர்ச்சிக் கட்டடக் கலைஞரும், கண்டுபிடிப்பாளரும், பொறியியலாளரும், சிற்பியும், ஓவியரும் ஆவார்.

இவர் ஒரு பல்துறை மேதையாகக் கருதப்பட்டவர். குறிப்பாக இவரது, சிறப்பான ஓவியங்களுக்காகப் பரவலாக அறியப்பட்டவர். "கடைசி விருந்து, மோனா லிசா" போன்ற ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. உரிய காலத்துக்கு மிக முன்னதாகவே செய்யப்பட்ட பல கண்டுபிடிப்புக்கள் தொடர்பிலும் இவர் பெயர் பெற்றவர். எனினும் இவரது காலத்தில் இவை எதுவும் வெளியிடப்படவில்லை.

அத்துடன் இவர், உடற்கூற்றியல், வானியல் மற்றும் குடிசார் பொறியியல் துறைகளின் வளர்ச்சியிலும் பெரும்பங்கு ஆற்றியுள்ளார். இவர் தணிக்க முடியாத ஆர்வம் கொண்டவராகவும் தீவிர கற்பனை வளம் கொண்டவராகவும் அறியப்படுகிறார். உலகில் இதுவரை வாழ்ந்த மிகச் சிறந்த ஓவியர்களில் ஒருவராகவும், பன்முக ஆற்றல் கொண்டவராகவும் அறியப்படுகிறார்.


நிலவியல் உட்பட பல துறைகளில் தன்னுடைய அறிவார்ந்த எண்ணங்களை பகிர்ந்து கொண்ட இவர் தன்னுடைய காலத்தில நினைத்துப் பார்க்க முடியாத பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார்.

லியனார்டோ டா வின்சி அடிப்படையாக ஒரு ஓவியராக அறியப்படுபவர். இவருடைய "மோனா லிசா" (Mona Lisa) ஓவியம் உலகில் மிகவும் புகழ்பெற்ற ஓவியமாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு



120

### பதிலடி

விநியோகஸ்தர்கள் சங்கம் எடுத்த முடிவு, பட உலகில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. ரஜினி நடிக்க விஜயா - வாகினி தயாரிப்பதாக அறிவிக்கப்பட்ட 'உழைப்பாளி' படம், திட்டமிட்டபடி தயாராகுமா என்ற கேள்விக்குறியும் எழுந்தது.

நிலைமையை தீவிரமாக ஆராய்ந்த விஜயா - வாகினி நிறுவனம், திட்டமிட்டபடி 'உழைப்பாளி' படத்தை தயாரிப்பது என்றும், விநியோகஸ்தர்களை எதிர்பார்க்காமல் படத்தை நேரடியாக ரிலீஸ் செய்வது என்றும் தீர்மானித்தது.

இந்த முடிவு எடுக்கப்பட்டதும், பி.வாசு டைரக்ஷனில் படம் வேகமாக வளர்ந்தது.

### கதை

'உழைப்பாளி' கதை விறுவிறுப்பானது.

தொழிலதிபர் ரவிச்சந்திரன், தனது தொழில் திறமையால் கோடீஸ்வரர் ஆகிவிடுகிறார். அவரது மனைவி சுஜாதாவின் 3 அண்ணன்களுக்கும் இந்த திரண்ட சொத்தை தாங்களே அனுபவிக்க வேண்டும் என்ற விபரீத எண்ணம் ஏற்படுகிறது.

இதனால் தொழிலதிபரை கொன்றுவிட்டு, அவரது வாரிசான சிறுவன் ரஜினி வாயிலும் விஷத்தை ஊற்றி விடுகிறார்கள். ரஜினி, அக்கா ஸ்ரீவித்யாவால் காப்பாற்றப்படுகிறார். தாய் மாமன்களுக்கு பயந்து தலைமறைவாக வாழ்கிறார்.

ரஜினி வாலிபனாகிறார். ஒரு தொழிற்சாலையில் 'உழைப்பாளி'யாக வேலையில் சேருகிறார். அங்கே ரவுடியாக இருந்து அராஜகம் செய்தவர்களின் கொட்டத்தை அடக்குகிறார்.

ஒருமுறை ரஜினி ஒரு பங்களாவுக்கு வர நேரிடுகிறது. வந்த இடத்தில் அந்த பங்களாவுக்கு மட்டுமல்ல, கோடீசுவரர் ரவிச்சந்திரனுக்கும் வாரிசு என்பது தெரிய வருகிறது. தனது தாயார் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் தாய்மாமன்களின் கண்காணிப்பில் இருப்பதும் தெரிகிறது. தாயாரைக் காப்பாற்றி தாய்மாமன்களை ஜெயிலுக்கு அனுப்புகிறார், ரஜினி. இடையே ரோஜாவுடனான காதல் காட்சிகளும் உண்டு.

### உணர்ச்சி மிக்க வசனம்

இந்தப் படத்தில், தமிழக ரசிகர்கள் மீது தான் வைத்திருக்கும் அன்பை வெளிப்படையாக தெரிவிக்க எண்ணினார், ரஜினி. அதற்கென உருவாக்கப்பட்ட வசனத்தை உணர்ச்சிபூர்வமாக பேசவும் செய்தார். அந்த வசனம் வருமாறு:-

'நான் ஒரு அனாதை. வேலை தேடி தமிழ்நாட்டுக்கு வந்தேன். தமிழ்நாட்டில் கோடிக்கணக் கான சகோதர - சகோதரிகள் என் மீது பாசம் வெச்சிருக்காங்க. என் மனசுக்கு பட்டதை 'சட்'டுன்னு சொல்வேன். 'பட்'டுன்னு செய்வேன்.

நாளைக்கு நான் அப்படி இருப்பேன், இப்படி இருப்பேன்னு சொல்றாங்க. ஆனா நான் சொல்றேன். நேத்து என்னை ஆண்டவன் கூலியா வெச்சிருந்தான். இன்னிக்கு நடிகன் ஆக்கியிருக்கான். நாளைக்கு எப்படி இருப்பேன்னு தெரியாது. அது அந்த ஆண்டவனுக்கு மட்டும்தான் தெரியும்.'

ரஜினியின் வாழ்க்கை நிலையை உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்திய இந்த வசனம் ரசிகர்களிடையே பெரிய வரவேற்பை பெற்றது.


படத்துக்கு இசை இளையராஜா. 'ஒரு மைனா மைனாக் குருவி மனசார பாடுது', 'உழைப்பாளி இல்லாத நாடுதான் எங்கும் இல்ல', 'ஒரு சோலைக்கிளி சோடிதன்னை தேடுது தேடுது', "அம்மா அம்மா எந்தன் ஆரு யிரே', 'முந்திரை போட்டு குத்திடு தப்பாது ராஜா' ஆகிய பாடல்களுக்கு அமர்க்களமாக இசையமைத்து இருந்தார், இளையராஜா.

### வெற்றி

விநியோகஸ்தர்கள் சங்க தடையை மீறி, சில ஊர்களில் "உழைப்பாளி"" படத்தை விநியோகஸ்தர்கள் வாங்கினார்கள்.

என்னும் பெரும்பாலான ஊர்களில், விஜயா - வாகினி நிறுவனமே நேரடியாக ரிலீஸ் செய்தது.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து-130

....சோத்துல கெடந்த கல்லுன்னு நெனச்சு வைர மோதிரத்திலிருந்து உதிந்து விழுந்த வைரக்கல்லக் கடிச்சும் கடிக்காம முழுங்கிருக்கான் பாவிப்பய. அது கொடல அறுத்துக் கொன்டு புடிச்சு.

இந்த இழவுச்சேதி போச்சோ இல்லையே கிழிஞ்ச சட்டைக்கு ஊசிநூல் தச்சுக்கிட்டிருந்த சுப்பஞ்செட்டியாரு எம்மக்கா என்னு கத்துனாரு; வளவிப் பொதி மேல சுருண்டு விழுந்து செத்தே போனாரு.

பெறந்து வாரது மட்டும் தானய்யா ஒரே வழி; சாவுக்குப் பல வழி.

காலம் இருக்கே காலம்- அது ரெண்டு கையிலயும் புழுதியும் விபூதியும் புடிச்சு உக்காந்திருக்கு. எவ்வளவு பெரிய வெற்றியா இருக்கட்டும்! சீ! மறைஞ்சு போன்னு புழுதியடிச்சு வெற்றிய மறைச்சு விட்டுப்போயிருது.

எவ்வளவு பெரிய துன்பமாயிருக்கட்டும்! சூ! மறந்து போன்னு விபூதியடிச்சுத் துன்பத்த மறக்கடிச்சிட்டு போயிருது.

காலத்துக்குன்னு மாறாம இருக்கிற கொணம் இது ஒண்ணுதான்.

இன்னொண்ணும் கவனிக்கணும் நீங்க. காலம் செய்யிற வேலை என்ன தெரியுமா? மனுசப்பயலச் சன்னஞ்சன்ன மாத் தடவிக்குடுத்து அவனச் சாவுக்குத் தயாரிக்கிறதுதான்.

ஒரே நாள்ல சாவு வந்தா பயந்து கழிங்சிருவான் மனுசன்னு தெரியும் காலத்துக்கு. தோல்வி; கண்ணீர்; சிக்கல்; சீக்கு; ஏமாற்றம்; பிரிவு; உள்சாவு; வெளிச்சாவு; இடி; மழை; பூகம்பம்; காத்து; இது களத் காட்டிக்காட்டி மனுசனச் சின்னச் சின்னதாச் சாக வச்சு, கால்மாகாணி உசுரை மட்டும் விட்டு வச்சிருக்கு கடைசிச் சாவுக்கு.

ஒவ்வொரு பிறப்பும் இந்த பூமிக்கு ஒரு படிப்புப் படிச்சுட்டுப்போக வருது; ஒவ்வொரு இறப்பும் இந்த பூமிக்கு ஒரு பாடம் சொல்லிட்டுப் போகுது. யாரு பெறந்தாலும் ஆகாயத்துல வெற்றி மொளைக்கிறது மில்ல; யாரு செத்தாலும் சூரியன் நெஞ்சப் புடிச்சு நின்டு போறதுமில்ல.

காலம்தான் ஞானம்; காலத்தைப் போல மனசு வச்சிருக்கிறவன் ஞானி.



காலம் வீசியடிச்ச விபூதியில ஆறே மாசத்துக்குள்ள அழுக கண்ணு காஞ்சு போச்சு கனகத்துக்கும் பவளத்துக்கும்.

கல்லு விழுந்த மோதிரத்தக் கருவாச்சிக்கே அவுக திருப்பிக் குடுக்க அவ அதை வித்து சொக்கத் தேவன்பட்டியிலயே பொட்டிக்கடை போட்டுக் குடுத்தா கைம் பொண்டாட்டிக ரெண்டு பேருக்கும்.

அந்த வருசம் காடு வெளஞ்சு போச்சு கருவாச்சிக்கு.

வரவு வந்தா செலவும் சேர்ந்து வருமா இல்லையா... வந்திருச்சு.

அழகு சிங்கத்தப் பள்ளிக்கூடம் சேக்கிறேன்னு ஆடம்பரம் பண்ணி அதிரிபுதிரி பண்ணிப்புட்டா.

சாணி மொழுகின மூங்கில் மொறத்துல ஒரு சீப்பு வாழப்பழம் வச்சு, ஒரு செரட்டையில குங்குமம் நெப்பி, ஒரு செரட்டையில சந்தனம் கொழச்சு, அச்சுவெல்லம் பரப்பி, வெத்தல பாக்கு மேல தச்சண வச்சா ஒண்ணே கால் ரூவாய.

எங் குலதெய்வமா நெனச்சுக் கும்புடறேன் சாமி; உருப்படி பண்ணிவிட்ரு என் ஒத்த மகன கண்ணெல்லாம் தண்ணி தவ்வக் கைபுடிச்சுக் குடுத்தா கண்ணாடி வாத்தியார்க்கிட்ட. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-43

# உசன் வாழ் கழக இளைஞர்களின் முதுசம்!






பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எமது பிரதேசத்தில் நல்ல நிகழ்வுகள், உழைப்பின் உயர்வுகள் என பலதும் நடந்து கொண்டிருக்கின்றன. நல்லனவற்றை எடுத்துச் சொல்லவும் மனம் வேண்டும் அல்லவா. சற்று வித்தியாசமாக. ஆனால் இங்குள்ள இளைஞர்களுக்கு எடுத்துக் காட்டாக நடக்கின்ற நிகழ்வுகளை அனைவரும் தெரிந்து கொள்வதுடன் மட்டுமல்லாது அதனை பாராட்டவும் தவறக்கூடாது. உண்மையிலேயே மனந்திறந்து பாராட்ட வேண்டிய நிகழ்வொன்று கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி பகுதியில் உசன் கிராமத்தில் நடந்தேறியிருக்கின்றது. பாராட்டுவதற்கும் பக்குவம் வேணடும். அதுபோல ஊக்குவிப்பு ஒன்று இருந்தால் தானே உலகத்தை எமது கைகளுக்குள் அடக்கி வைக்கும் உத்வேகமும் பிறக்கும்.

சமகால நாட்டு நடப்புகளை அலசி ஆராய்ந்தால் எமது பிரதேசத்தில் இளைஞர்கள் செய்கினற அட்டகாசமும் அடாவடித்தனமும் தான் எம்முன்வந்து நிற்கும். அவ்வளவுக்கு பிரச்சினைகளின் மொத்தவடிவமாக இளைஞர்கள் ஆகிவிட்டார்கள் அல்லது ஆகிவிட்டிருக்கின்றார்கள். எவருமே இளைஞர்கள் என்றவுடன் முகஞ்சுழிக்கும் தன்மையே காணப்படுகின்றது. அதற்கு காரணமும் உண்டு. தற்போது தினமும் நடைபெறுகின்ற நிகழ்வுகளை அறியும் போது மனம் பதைபதைக்கின்றது. வாள் வெட்டு, கஞ்சா கடத்தல், கற்பழிப்பு, கொலை என சமூகத்திற்கு ஒவ்வாத நிகழ்வுகளாக நடந்துகொண்டிருக்கின்றன. அனைத்திலும் இளைஞர் கூட்டம் மும்முரமாக வழிதவறி நடந்து கொள்வதனை அறிந்து கொள்ளலாம். போதைப் பொருளை கடத்திய குற்றச்சாட்டுக்காக மயூரன் என்னும் இலங்கையில் பிறந்த அவுஸ்திரேலியா பிரஜை இந்தோனேசியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளார். இவையெல்லாம் சமூகத்தை சீரழிக்கின்ற கலாசாரத்தை கட்டுப்படுத்துவதற்கென்றாலும் இதில் ஈடுபடுபவர்களாக திருந்தினாலன்றி இவற்றை முற்றுமுழுதாக தடுப்பதென்பது கடினம். சமூகத்தை தாங்க வேண்டியவர்கள் சமூகத்திற்கு வேண்டாதவர்களாக ஆகிவிட்டிருக்கின்றார்கள். அனைத்திற்கும் நாம் தான் காரணம். இளைஞர்களை தேசத்தின் அச்சாணியாக அபிவிருத்தியின் தூண்களாக நிலை நிறுத்த தவறியதன் விளைவாகவே இதனை கருதலாம். இந்த விடயத்தை நாம் இன்னும் விரிவாக ஆராயவேண்டும். நாளைய உலகம் இளையவர்கள் கையில் என்றால் அவர்களின் முயற்சியை, நல்லெண்ணத்தை, சிந்தனையாற்றலை மழுங்கடிக்க வேண்டாமே.

நேற்றைய தினம் உழைப்புக்கான உயர்வை கொண்டாடிய தினம். அந்த தினத்தை உணர்வு பூர்வமாக அதற்கு முந்திய தினத்தில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் இளைஞர்கள் தமது கழகத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவையும் புதிதாக தமது முயற்சியினால் உருவாக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தையும் திறந்து முதுசம் என்னும் நூலையும் வெளியீடு செய்திருக்கின்றார்கள். உதாரண புருசர்களாக உருவாகியிருக்கின்ற இளைஞர்களை முன்னின்று பாராட்டி உங்களுடன் எழுதும் இக்கைகளும் மகிழ்வடைகின்றது. உசன்பதியில் புகழுடன் வீற்றிருக்கின்ற உசன் கந்தசுவாமி ஆலயத்தின் பின்புறமாக உள்ள காணியை மக்களின் நிதியை சேகரித்து தமக்கென வாங்கி அதில் சுற்றிவர மதிலமைத்து பச்சை வர்ணமுமடித்து மின்விளக்குகளும் பூட்டி அழகு பார்த்திருக்கின்றார்கள் அந்த கழகத்தைச்சேர்ந்த இளைஞர்கள். இதற்கு பிரதம விருந்தினராக மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர் கஜந்தன் ஆகியோரும் கலந்து இளைஞர்களை ஊக்குவித்திருக்கின்றனர். இளைஞர்கள் என்றால் சந்தியில் கூட்டம் கூடி பொழுது போக்கின்ற கூட்டம் என எண்ணுகின்ற தற்காலத்தில் தமது ஆளுமையை, உள்ள கிடக்கையை, கூட்டு முயற்சியை, உழைப்பின் உயர்வை நிகழ்வுகளாக பரிணமித்து நடத்தியும் காட்டியிருக்கின்றார்கள். விளையாட்டு கழகங்களின் உன்னதமான உழைப்பை கொண்ட கொள்கையின் பிடிப்பை ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் மீண்டும் ஆழப்பதித்தியிருக்கின்றது. வாழ்த்துக்கள்!.

விளையாட்டுக்கான கழகமாக இருப்பினும் கழகத்தோழர்களிணைந்து தமது வரலாற்றினை மீண்டும் எழுதி மற்றையவரும் அறிந்து கொள்ள வாய்ப்பளித்திருக்கின்றார்கள். சமூகஞ்சார்ந்த நற்பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். குறிப்பாக குருதிக் கொடை நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. பெற்றோர்கள் தமது இளவயது மக்களின் உன்னதமான செய்கையை, உலகம் வியக்கின்றதனை இன்னும் பாராட்டு கின்றதனை பார்த்தும் கேட்டும் பூரிப்படைந்துள்ளனர். இதுபோல எமது பிரதேசத்தில் நடக்கின்ற முயற்சிகளுக்கு நாமும் முக்கியத் துவம் கொடுப்பதோடு அதனை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டவும் வேண்டும். இந்த முயற்சிகளுக்கு முத்தாய்ப்பாக குறித்த நேரத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரசன்னமும் அவர்களது உரைகளும் நிச்சயமாக அந்த இளம் இரத்தங்களுக்கு ஊக்கத்தை கொடுத்திருக்கும்.

ஒரு நல்ல கூட்டு முயற்சியை கண்கூடாக கண்டு வியக்கும் வாய்ப்பாக இந்த நிகழ்வு அமைந்தது. ஒரு பக்கம் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதும் மாகாண மட்டத்தில் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கு அடையாளமாக கேடயத்தை வழங்கிய நிகழ்வும் இதற்குள் உள்வாங்கப்பட்டிருந்தது. இளைஞர்களுக்கு பட்டதாரிகளுக்கு தேவையான தலைமைத்துவம், கூட்டாக இயங்குதல், திட்டமிட்டதை செயற்படுத்தல், தகவலைப் பரிமாறும் திறன், சிறப்பாக நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்தி முடிக்கும் திறன், மக்கள் அனைவரையும் இணைக்கும் உத்தி, மக்களிடையே நம்பிக்கையை வளர்த்தெடுத்த திறன், உழைப்பின் உயர்வை உறுதிசெய்த பக்குவம் என அனைத்து திறன்களையும் தாமாகவே வளர்த்தெடுத்து வெளிக்காட்டிய விதம் அருமையிலும் அருமை.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXX

நிகழ்வினை ஒழுங்கமைத்து கம்பீரமாக குரல் கொடுத்துக்கொண்டிருந்த குரலுக்கு சொந்தக்காரன் விவசாயபீடத்து பட்டதாரி என இனங்கண்டு கொண்டபோது பீடத்தில் வெளிக்கொள்ளாத அந்த திறமையை அங்கே நிகழ்வு மேடையில் வெளிக்காட்டியபோது உள்மனம் வெளிக்கொண்டு வாழ்த்தியது. கழகம் தமது பெருமையை முதுசம் என்னும் பொக்கிசத்தை வியத்தகு நூலாக வெளியிட்டு அசத்தியிருக்கின்றார்கள் எனலாம். நிகழ்வில் எதிர்பார்த்திராத அளவுக்கு மக்கள் கூடியிருந்தனர். இளைஞர்களின் இந்த நிகழ்வை எவருமே புறக்கணிக்க விரும்பவில்லை. மாறாக அவர்களது தேவை அனைத்து குடும்பத்தினருக்கும் இன்னும் கோயில நிகழ்வுகளுக்கும் தேவைப்படுகின்றதனை பெரியவர் ஒருவர் சுட்டிக்காட்டினார். இந்தளவிற்கு இவ்வூர் இளைஞர்கள் ஒற்றுமையாக பல முயற்சிகளை முன்மாதிரியாக செய்வதனை அறிந்தளவில் அவர்களுக்கான இக்கட்டுரையை வரையவிரும்பியது.




2007 ஆம் ஆண்டு முன்னர் ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம வளங்கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு என்னும் நூலினை வெளியிட்டிருந்தார். அதில் உசன் கிராமத்தைப்பற்றிய வரலாறு உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. தற்போது முதுசம் என்னும் படைப்பு பல விடயங்களை உள்வாங்கி உசன் கிராமத்து துடிப்புள்ள இளைஞர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றது.


பசுமையான தொழில்நுட்பங்களின் தொடக்கம் கிராமம் ஆகும். கிராமத்து இளைஞர்களின் துடிப்பான நற்செயல்கள் நாட்டின் அபிவிருத்திக்கான அச்சாணியாகும். முதுசம் நூலின் உள்ளே பல அரிய தகவல்கள் திரட்டப்பட்டு அழகாக கோர்க்கப்பட்டுள்ளன. கழகத்தின் வரலாறு, பாரம்பரிய விளையாட்டுக்கள், இந்து சமய கிரியை முறைகளும் அதற்கான விளக்கங்களும், தமிழ் முறைப்படியான திருமண முறை, புதுமனை புகுவிழா, பிறந்த நாள் விழா என்பனவற்றை உள்வாங்கி சிறந்த பொக்கிசமாக உருவாக்கியிருக்கின்றார்கள். நிகழ்வில் நூலை வெளியிட்டு உரையாற்றிய கவிஞர் குறிப்பிட்டபடி இந்நூலின் உருவாக்கத்திற்கு கழகமே பொறுப்பாக காட்டப்பட்டிப்பதை வியந்து பாராட்டியிருக்கின்றார். இந்த நல்லதொரு கூட்டு முயற்சி நிச்சயமாக அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும் அத்துடன்முதுசம்என்னும்இந்த அரிய நூல் அனைவரதும் வீடுகளில் எமது முதுசமாக வைக்கப்பட்டு அனைவராலும் வாசிக் கப்பட வேணடியதொன்றாகும். நூலினை முதுசமாக கருதிய ஸ்ரீமுருகன் விளையாட்டு கழகத்தினர் எமது முதுசமாக கருதப்பட வேண்டியவர்களாவர். இருக்கின்ற குறை நிறைகளை பேசித்தீர்த்து இவ்விளைஞர்களுக்கு ஒத்தாசையாக இருந்து இன்னும் பலவற்றை சாதிக்க நாமெல்லோரும் இணைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஐ நிறைவேற்றியவர் ஜனாதிபதி மைத்திரியே

## சோபித தேரர் சுட்டிக்காட்டு

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் கடும் முயற்சிகளை மேற்கொண்டவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அன்றி வேறு எவருமில்லை என நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி தனது அதிகாரத்தை விட்டுக்கொடுக்க தயாரானது மிகவும் பாராட்டுக்குரியது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாதுளுவாவே சோபித தேரர் இதனை தெரிவித்தார்.

அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் மாத்திரமல்லாது, ஜே.வி.பியினர் வழங்கிய ஒத்துழைப்புகளை மிகவும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

அதேபோல் இந்த செயற்பாடு முழுமையடைய வேணடுமாயின் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவது கட்டாயமானது.

தற்போதைய ஜனாதிபதியின் ஊடாகவே அதனை நிறைவேற்ற முடியும். வேறு ஒருவர் மூலமாக அதனை நிறைவேற்ற முடியும் என நினைப்பது முட்டாள் தனமானது. கல்லு சூடாக இருக்கும் போதே ரொட்டியை சுட வேண்டும் எனவும் மாதுளுவாவே சோபித தேரர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 5ஈழத்தமிழர்களுக்கு சிறைத்தண்டனை

விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்ததாக குற்றம் சாட்டப்பட்ட நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐந்து ஈழத்தமிழர்களுக்கு, ஹேக்கல் உள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

43 வயதுக்கும், 60 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களாக இருந்தனர்என்றும், 2003 ஆம் ஆண்டுக்கும், 2010 ஆம்ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், தீவ்ரவாத அமைப்புக்கு நிதிசேகரிததனர் என்றும், குற்றம்சாட்டியுள்ளாஹேக்மேல்முறையீடுநீதிமன்றம், இதற்காக சிறைத தணடனைகளைவிதித்துள எது.

இவர்களுக்கு 19 மாதங்கள் தொடக்கம், 75 மாதங் கள் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நிதியுதவி வழங்க மறுத்தவர்களை அச்சுறுத்தியதாகவும், சட்டவிரோதமான சீட்டிழுப்புகளை நடத்தியதாகவும், நீதிமன்றம் இவர்கள் மீது குற்றம்சாட்டியுள்ளது.

2011 ஆம் ஆண்டு இவர்களை நெதர்லாந்தின் கீழ் நீதிமன்றம் குற்றவாளிகளாக அறிவித்திருந்த போதிலும், தீவிரவாத அமைப்பின் உறுப்பினர்கள் என்ற வகையில் தண்டனை அளித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

யாழ்.வலயப் பாடசாலைகளில் ஓகஸ்ட் 2015 இல் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை மேமாதம் 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான நேர அட்டவணை பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றச் செய்வதில் உரிய பாடசாலை அதிபர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 50 | 100-120 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 70 | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 50 |
| கோவா | 40 | 40 | 35 | 40 |
| கரட் | 140 | 90 | 100-160 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 50 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 110 | 90 |
| பாகற்காய் | 120 | 80 | 80-100 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 60 | 80-100 | 100 |
| லீக்ஸ் | 160 | 120 | 180 | 150 |
| பீற்றூட் | 60 | — | 50 | 50 |
| கறிமிளகாய் | 100 | 50 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 550 | — | 400-500 | 450 |
| போஞ்சி | 160 | 100 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 70 | 30 | — | 90 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 140 | 180 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30 | 60 | 60 |
| இராசவள்ளி | 120 | — | 120 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 358


நாகராஜா கிருஷ்ணா




சர்மி சர்மிளா




விது விதுசன்




மேரி தோமஸ்




நிதுர்சா நகுலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலன் சார்ந்த அரசியலா? கதிரைக்கான அரசியலா?




இலங்கையில் ஆட்சி மாற்றம் இன்று பல்லோர் மனங்களிலும் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் கடந்த 10 வருட காலமாக இலங்கையில் நடைபெற்று வந்த குடும்ப ஆட்சி முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு யார் எப்போது கைது செய்யப்படுவார்கள் என்று மகிந்த குடும்பம் கலங்கிப்போய் நிக்கின்றது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தின் பழி பாவங்களை மகிந்த குடும்பம் இப்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. இது தமிழ் மக்கள் மனங்களில் பெரும மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாற்றத்திற்கு பல்வேறு சர்வதேச நாடுகள் பின்னணியில் இருந்தாலும் இந்த சந்தோசத்தின் முழுப்பலனையும் தமிழ் மக்கள் அனுபவிக்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

இங்கு சந்தோசம் என்று நான் குறிப்பிடுவது ஆட்சி மாற்றத்தினால் வந்த சந்தோசம் அல்ல. இறுதி யுத்தத்தின் போது கொத்துக் கொத்தாக கொத்துக்குண்டுகளால் எங்கள் உறவுகளை கொன்றொழித்த பாவியை ஆயுதத்தால் வீழ்த்த முடியாவிட்டாலும் வாக்குகளால் விழ்த்திய ஒரு மன ஆறுதல் மகிழ்ச்சி.

இந்த மாற்றத்திற்குப் பின்னர் பல மாறுதல் நாட்டில் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. குறிப்பாக வடக்கில் ஒரு சில மாற்றங்கள் நடைபெற்றாலும் தெற்கில் பல மாற்றங்கள் நடைபெற்று வருகின்றது.

அதில் 19 ஆவது அரசியல் அமைப்பில் மாற்றம் தான் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிரடியான நடவடிக்கைகள் இந்த அதிரடியான மாற்றங்கள் தெற்கில் உள்ள மகிந்த ஆதரவு சிங்கள மக்கள் சிங்கள மக்களை கொதிப்படையச் செய்துள்ளது.

இந்த நிலைமை தெற்கில் எவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்தப் போகின்றது என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டிய தேவையிருக்கின்றது.

தெற்கில் இனங்களுக்குகிடையே ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் குழப்பகரமான நிலைமையை வடக்கு அரசியல் தலைமைகள் எவ்வாறு தங்களுக்கு சாதகமாக மாற்றப் போகின்றது என்ற கேள்வி இன்று எல்லோர் மத்தியிலும் இருக்கின்றது.

இருந்தாலும் இந்த மாற்றத்திற்குப் பின்னர் வடக்கில் நடைபெற்ற விரும்பத்தகாத சில சம்பவங்கள் தமிழ் அரசியலின் கீழ்த்தனமான நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

குறிப்பாக சொல்லப்போனால் கொடும் பாவிகள் எரிப்பு என்பது சரி பிழைகளுக்கு அப்பால் தமிழ் அரசியலில் ஒரு ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே பல அரசியல் அவதானிகள் பார்க்கின்றார்கள்.

ஏனெனில், கடந்த 30 வருடமாக நாட்டில் தமிழ் மக்களின் உரிமைக்காக நடைபெற்ற போராட்டத்தை சிங்கள பேரினவாதிகள் பயங்கரவாதமாக சித்தரித்துக் கொண்டாலும் தமிழ் தலைவர்களின் உருவப் பொம்மைகளை எந்த சிங்கள தலைமையும் வீதியில் போட்டு எரிக்கவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் என்பது இன்று பல்வேறு விமர்சனத்துக் குட்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த விமர்சனங்கள் எல்லாம் உள் வீட்டுக்குள் இருப்பவர்களே செய்யும் நாசகார வேலை என்பது வெளிப்படையான உண்மை. இதனை யாரும் மறுத்து விடமுடியாது. அவ்வாறு செய்வது கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிவதைப் போன்றது.

அண்மைக்காலமாக வடக்கில் முக்கியப் படுத்தப்படும் செய்தியாக வலிகாமம் பகுதியில் உள்ள கிணற்றுநீர்ப் பிரச்சினை. தமிழ் அரசியல் தலைவர்களுக்கு ஏதாவது ஒரு சம்பவம் நடைபெற்றால் உடனே போராட்டம், அறிக்கை, என்று ஊடகங்களின் பக்கத்தை நிரப்புவது தொழிலாக மாறிவிட்டது.

இந்த குடிநீர் விவகாரம். உண்மையில் மக்கள் நலன் சார்ந்ததா அல்லது அரசியல் நோக்கம் கொண்டதா என்ற கேள்வி எழுப்புகின்றபோது அது அரசியல் நலன் சார்ந்ததே என்ற முடிவுக்கே வரமுடிகின்றது.

காரணம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், மாவை, சுமந்திரன் ஆகியோருக்கான போராட்டங்கள் இன்று வடக்கில் மேற்கொள்ளப்பட்டதன் பின்னணியில் இதனை புரிந்துகொள்ளலாம்.

ஐ.நாவின் அறிக்கை தொடர்பில் ஐ.நாவை பிழையான திசையில் வழி நடத்துவதாக சுமந்திரனுக்கு எதிரான போராட்டம், வலி. வடக்கில் இருக்கின்ற வாக்குப் பலத்தை குறி வைத்து மாவையை ஓரம் கட்டுவதற்கு வலிகாமம் நீர் விவகாரம் என்று இந்த போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள மக்களின் பிரச்சினையை கையில் எடுத்து செயற்படுத்தப்படுவது அரசியல் காரணத்திற்காகவே இது மேறகொள்ளப்படுகின்றது என்பதே வெளிப்படையான உண்மை.

இதனை வாசிப்பவர்கள் இது எனக்கு பிரச்சினையாக தெரியவில்லையா என்ற ஒரு கேள்வியைக் கேட்கலாம் ஆனால் இது அரசியலுக்கு அப்பால் எல்லோரும் சேர்ந்த செயற்படுத்தி தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினையாக இருக்கின்றது.

இந்த விடயத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்டி அடித்துக்கொண்டு இந்த விவகாரத்தை கையில் எடுத்திருப்பது நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஒரு ஆசனம் கிடைத்தால் போதும் என்ற ஒரு கோட்பாட்டுடன் காய்களை நகர்த்துகின்றது.

தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு முக்கிய நபராக பார்க்கப்பட வேண்டியவர். இந்த போராட்டத்தில் தனது தந்தையை இழந்து கொள்கையில் இன்றுவரை உறுதியுடன் இருந்தாலும் கூட்டமைப்பை விட்டு வெளியேறி ஒரு வரலாற்றுத் தவறை அவர் செய்திருக்கின்றார்.

அவ்வாறு அவரின் வெளியேற்றம் கூட இன்று கூட்டமைப்பு வேறு திசையில் பயணிக்க ஒரு காரணமாக இருக்கலாம். கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகள் அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு பலம் மிக்க தமிழ் அரசியல் அமைப்பு. இந்த அமைப்பை எதிர் காலத்தில் தாங்கி வழிநடத்தக் கூடிய ஒருவர் வெளியில் நிற்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் தேசிய உணர்வு மிக்கவர்கள் ஒரு சிலரில் உணர்ச்சிவசப்படும் அரசியல்வாதிகளாக இருக்கின்றார்கள்.

கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரையில் உணர்ச்சி அரசியலுக்கு அப்பால் தெளிந்த அரசியல் சிந்தையுடன் செயலாற்றக் கூடிய ஒருவராக பார்க்கப்படும் நிலையில் கூட்டமைப்புக்குள் இணைந்து எதிர்கால அரசியலலை முன்னெடுப்பதே சிறந்த வழியாக பார்க்கப்படுகின்றது.

இன்று வடக்கில் உள்ள ஊடகங்கள் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றது. இதனால் என்னவோ யாழ்ப்பாணத்தில் குடிநீர் பிரச்சினை என்றாலும் சரி ஏனைய பிரச்சினை என்றாலும் சரி முண்டி அடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் குடிநீர் விவகாரம் தொடர்பான ஒரு ஆவணப்படம் வெளியாகியிருந்தது. இதில் வலி.வடக்கில் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு தொடர்பில் ஒரு ஊடகவியலாளர் தனது பதிவைச் செய்திருக்கின்றார்.

இந்த குடிநீர் பிரச்சினையை விட மிக மோசமான நீர் பிரச்சினை வன்னியில இருக்கின்றது. இது எந்த ஊடகங்களுக்கும், எந்த அரசியல்வாதிக்கும் தெரியவில்லை.

வலிகாமம் வடக்கில் பல பாடசாலைகள் இருக்கின்றது. இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சிந்திக்கும் நாங்கள். இதே பிரச்சினை உள்ள தண்ணீரைத்தான் வன்னி மக்கள் குடிக்கின்றார்கள் என்பதை ஏன் மறந்துபோனோம்.

நாங்கள் மறந்து போகவில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய தமிழ் அரசியல வாதிகள் யாராவது வன்னியில் தேர்தல கேட்டிருந்தால் இன்று வன்னியிலும் குடிநீர் விவகாரம் ஆவணப்படம் தயாரிக்கும் நிலை வரைக்கும் சென்றிருக்கும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்ற காலத்தில் பிறந்த பிள்ளைகள் இன்று ஏதோரு ஒரு குறைபாட்டுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கருவில் இருக்கும் போது தாய்மார் சுவாசித்த பொஸ்பரஸ் குண்டுகளின் வாயுக்கள் அவர்களை இந்த நிலைக்கு தள்ளியிருக்கின்றது.

புதுக்குடியிருப்பு, மாத்தளன், வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால், ஆனந்தபுரம் பகுதிகளில் வாழும் மக்கள் தாங்கள் பயன்படுத்திய கிணறுகளை மூடிவிட்டு புதிய கிணறுகளை பயன்படுத்தி வருகின்ற போதும் வசதி குறைந்தவர்கள் பழைய குடிநீரையே பயன்படுத்தி வருகின்றார்கள்.

குறிப்பாக முள்ளிவாய்க்கால் கிணறுகளில் நச்சுத்தன்மை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு மாகாண சபை உறுப்பினர் ஒருவரை இதனை ஆய்வுக்குட்படுத்தி அதனை உறுதிப்படுத்தியும் இருக்கின்றார்கள்.

இங்கு வாழ்கின்ற மக்கள் வேற்றுகிரகத்திலிருந்து வந்தவர்கள் அல்ல. போராட்டம் என்பதை உள்ளிருந்து பார்த்தவர்கள். பொதுமக்களின் பிரச்சினை என்றால் வெறுமனனே சுயநல அரசியலுக்கு அப்பால் பொது நோக்குடன் பார்த்து அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முன்வாருங்கள்.

இந்த விடயத்தில் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்து செயற்பட்டு உண்மைகளை வெளியில் கொண்டு வருதல் எமது இனத்தின் எதிர்காலத்திற்கு நன்றாக அமையும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருட்களை கடத்தினால் மரணதண்டனை வழங்க வேண்டும்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க உறுதி

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.**



போதைப்பொருள் கடத்தல், வர்த்தகம் போன்றவற்றுடன் தொடர்புடையவர்ளுக்கு நீதிமன்றினால் வழங்கப்படும் மரண தண்டனை அவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்தோனேசியா போன்ற நாடுகளில் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது.

அதேபோன்று இலங்கையிலும் மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மரண தண்டனை நிறைவேற்றப்படாவிட்டால் நாட்டில் போதைப் பொருள் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

போதைப்பொருள் பிரச்சினையை முற்று முழுதாக இல்லாதொழிக்க இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாறி பின்னர் அதிலிருந்தும் விடுதலையாகி சமூகத்துடன் மீள இணையும் குற்றவாளிகள் மீளவும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர்.

சிறையில் தண்டனை அனுபவிக்கும் போதே சிலர் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே மரண தண்டனை உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாகிஸ்தான் பிரஜையிடமிருந்து 34 ஹெரோயின் உருண்டைகள் மீட்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரஜை, நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ஹெரோயின் உரு ண்டைகள் 34 மீட்கப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பிரிவு அறிவித்துள்ளது. ஹெரோயின் உருண்டைகளை விழுங்கி வந்த நிலையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார்.

அந்த உருண்டைகளின் பெறுமதி 60 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல்.184 என்ற விமானத்திலேயே அவர், பாகிஸ்தான் கராச்சி நகரத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி இந்த நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

அவ ருடைய நடமாட் டத்தில் சந்தேகம் கொண்ட தையடுத்தே விமானநிலைய பொலிஸ் போதைப்பொருள் பிரிவினர் அவரை கைது செய்து நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதித்திருந்தனர். (இ-5)

## பிரிட்டன் தேர்தல் கண்காணிப்பு பணியில் இலங்கையின் முன்னாள் அமைச்சர்கள்

(கொழும்பு)

பிரிட்டனில் எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள தேர்தல் கண்காணிப்பு பணிகளில் இலங்கை முன்னாள் அமைச்சர்கள் இருவர் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இலங்கையின் முன்னாள் அமைச்சர்களான இம்டியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு ஆகியோர் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக அவர்கள் இன்று லண்டன் புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

பொதுநல நாடுகள் அமைப்புச் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட அழைப்பிற்கு அமைய அரசாங்கம் கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மகிந்தவின் கூற்று நகைப்பிற்குரியது

### ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கூற்று நகைப்பிற்குரியது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க முடியாது என வரையறுக்கப்பட்டது.நான் மீண்டும் பதவிக்கு வருவேன் என்ற அச்சத்தினாலேயே" என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இந்தக் கூற்று நகைப்பிற்குரியது என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


மக்கள் கோரி வந்த 19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு துரோகம் இழைக்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

எனவே முன்னாள் ஜனாதிபதியின் கூற்று நகைப்பிற்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.(இ-5)

## நியூசிலாந்து பிரதமர் இலங்கைக்கு விஜயம்



நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ மற்றும் அவரது பாரியார் வெளிநாடு விஜயம் ஒன்றை நிறைவு செய்து நாடு திரும்பும் வழியில் நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்தனர்.

குவைத்திலிருந்து நியூசிலாந்து நோக்கி பயணிக்கும் வழியில், நியூசிலாந்து பிரதமர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூசிலாந்து பிரதமர் ஒரு மணி நேரம் கட்டுநாயக்க வானுர்தி தளத்தில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் தெரியவருகிறது. (செ-11)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியாளருக்கு வேண்டும் நம்பிக்கை

தனது செயற்பாடுகளிலேயே நம்பிக்கை இல்லாதவர்கள் பிரச்சினைகள் என்று வரும் போது தடுமாறுவார்கள். பிறர் நம்மை விமர்சனம் செய்யும்போது நமது செயற்பாட்டைப் பற்றி நமக்கே ஒரு நல்ல தெளிவும் உறுதியும் இருந்தால் தான் விமர்சனங்களை நம்மால் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

நாம் செய்தது சரியாக இல்லையோ என்று நம்மை நாமே சந்தேகப்பட்டுக்கொள்ள ஆரம்பித்தால் எதிரிகள் நம்மை எளிதாக அமுக்கிவிடுவார்கள்.

தனது தொழிலின் மீது அபார நம்பிக்கை வைத்திருந்த ஒருவரின் வரலாற்றைப் பாருங்கள்.

உலகப் புகழ்பெற்ற கட்டடக் கலைஞர் கிறிஸ்தோபர் ரென். லண்டனில் ஒரு தேவாலயம் கட்டுவதற்கான பொறுப்பை அவரிடம் கொடுத்திருந்தனர். அவரும் அதைச் சிறப்பாக கட்டினார்.

தூண்கள் இல்லாமலேயே உறுதியாக நிற்கும்படி வித்தியாசமாக அமைக்கப்பட்டிருந்தது அந்த மண்டபம். இந்தச் சாதனையைப் பொறுக்கமுடியாத சிலர் அதற்குத் தூண்களை அமைக்கச் சொல்லி வற்புறுத்தினர். நிர்வாகக் குழுவினரும் ரென்னிடம் தூண்களை அமைக்கச்சொல்லி வேண்டுகோள் வைக்கவே அங்கு இரண்டு தூண்களை கட்டினார் ரென்.

50 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்தத் தேவாலயத்தைப் புதுப்பிக்கும் பணி நடந்தது. அப்போதுதான் ஒரு அதிர்ச்சிகரமான காட்சியை அங்கிருந்தவர்கள் கண்டனர். கடைசியாகக் கட்டப்பட்ட அந்த இரண்டு தூண்களும் மேல்தளத்துடன் இணைக்கப்படாமல் இரண்டு அடி இடைவெளியில் தனியாக நின்றிருந்தது. மற்றவர்களின் திருப்திக்காக ரென் அந்தத் தூண்களைக் கட்டியிருந்தாரே தவிர அந்தத் தூண்கள் கட்டடத்தைத் தாங்கவில்லை.

**என்றாவது ஒருநாள் உரியவர்கள் மக்கள் உண்மையை உணர்ந்து தன்னைப் பாராட்டுவார்கள் என்று ரென் நம்பினார். அதுதான் நடந்தது. அதைப் போல தேவைப்பட்டால் பிறரையும் நம்பக்கூடிய தைரியம் நமக்கு வரவேண்டும்.**

இதோஇன்னொரு வரலாற்றுச் சம்பவத்தைப் பாருங்கள்.

உலகம் முழுவதையும் வெற்றி கொள்ளவேண்டும் என்ற வேட்கையுடன் புறப்பட்டவர் அலெக்சாண்டர். பாரசீக நாட்டை வெற்றிகொள்ள அப்பகுதிக்குள் படையோடு நுழைந்தார் அவர். படையெடுக்கக்காத்திருக்கும் வேளையில் கடுமையான காய்ச்சல் அவரைத் தாக்கியது. உடன்வந்த அவரது வைத்தியர்கள் எவ்வளவோ முயன்றும் நோயைக் குணப்படுத்தமுடியவில்லை.

இது இந்த நாட்டுப்பகுதியில் வரும் விஷக்காய்ச்சல் போலத் தோன்றுகிறது. பாரசீக மன்னரின் அரண்மனை வைத்தியர் வந்தால் இந்த நோயைக் குணப்படுத்திவிடுவார் என்று அவர்கள் சொன்னார்கள்.

எதிரிநாட்டு வைத்தியரை நம்பி எப்படி வைத்தியம் செய்ய அழைப்பது? என்று பலரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அலெக்சாண்டர் மட்டும் தயங்கவில்லை. பாரசீக மன்னன் தன் எதிரி என்றாலும் மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர் என்று அவர் நம்பினார். அரண்மனை வைத்தியர் அழைத்து வரப்பட்டார். பரிசோதனை செய்தபின் இந்த விஷக்காய்ச்சலுக்கு உரிய மூலிகைச்சாறை நாளை கொண்டுவருகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார் அவர்.

மறுநாள் அவர் திரும்புவதற்கு முன்னால் ஒற்றர்கள் மூலம் அலெக்சாண்டருக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டிருந்தது. எதிரிநாட்டு வைத்தியர் கொண்டுவரும் மூலிகைச் சாற்றை குடிக்காதீர்கள். அதில் விஷம் கலக்கப்பட்டுள்ளது என்பதுதான் அந்தச் செய்தி. அந்த வைத்தியர் கொடுத்த மருந்தைக் குவளையில் பிடித்தபடி ஒற்றர்கள் அனுப்பிய தகவலை வைத்தியரிடம் சொன்னார் அலெக்சாண்டர். வைத்தியர் முகத்தில் அச்சம் பரவியது. ஆனால் அடுத்த விநாடியே அந்த மூலிகைச் சாறைக் கடகடவென குடித்துவிட்டார் அலெக்சாண்டர்.

எப்படி என்னை நம்பி அதைக்குடித்தீர்கள் என்று வைத்தியர் கேட்டபோது அதற்கு அலெக்சாண்டர் சொன்னபதில் இதுதான். பாரசீக மன்னர் எனக்குப் பகைவராக இருந்தாலும் சூழ்ச்சி செய்து என்னைக் கொல்லமாட்டார் என நம்பினேன். அரண்மனை வைத்தியரான நீங்களும் தொழில் நேர்மை உள்ளவராக இருப்பீர்கள் என்றுநம்பினேன். எனவே விஷம் கலக்கப்பட்டிருக்காது என்றெண்ணி தைரியமாகக் குடித்தேன் என்றார்.

**பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்**


என்று வள்ளுவர் சொன்னது இதைத்தான்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையை எதிர்கொள்ளப் போவது

# ஜோன் ஹெரியா – மைத்திரியா?





தமது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் பணியாற்றுவதன் மூலம் ஜோன் கெரியை தம் பக்கம் கவர்ந்திழுக்க முடியும் என ராஜபக்சாக்கள் கருதிய போதிலும், கெரி தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ராஜபக்சாக்களை செயற்பட வைக்க முயன்றார். அதன் விளைவு என்ன?

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னான்டோ எழுதியுள்ளார்.**

கடந்த ஜனவரி 08 ஆம் திகதி சிறிலங்காவில அதிபர் தேர்தல் முடிந்த பின்னர், அன்றிரவு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவுக்கு தொலைபேசி மூலம் அழைப்பு ஏற்படுத்தியிருந்தார். மகிந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டால் அவர் தனது ஆட்சியை சுமூகமாக மைத்திரியிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளாரா என கெரி, மகிந்தவிடம் தொலைபேசியில் வினவியிருந்தார்.

வாக்கு எண்ணும் பணி தொடர்வதாகவும், தான் வெற்றி பெறுவேன் என நம்புவதாகவும் தனது வெற்றியின் பின்னர் கெரியை சிறிலங்காவுக்கு அழைக்க விரும்புவதாகவும் மகிந்த தெரிவித்திருந்தார்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சராகக் கடமையாற்றிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கெரியிடம் சிறிலங்காவுக்கு வருமாறு ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தமை தொடர்பாகவும் தொலைபேசி உரையாடலின் போது கெரிக்கு நினைவுபடுத்தினார் மகிந்த.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன கெரியுடன் தொலைபேசியில் உரையாடி முடித்த பின்னர், 'ஜோன் கெரி மிகவும் நல்ல மனிதர் எனவும் அனைத்துலக சமூகத்தின் நெருக்கடிகளிலிருந்து சிறிலங் காவை விடுவிப்பதற்கு கெரியுடன் நெருக்கிப பணியாற்றுவேன் எனத் தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும்' மகிந்த ராஜபக்ச தனது நெருங்கிய விசுவாசி ஒருவரிடம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான ஒரு மகிழ்ச்சியான மனநிலையில் தனது எதிர்கால ஆட்சி தொடர்பாகத் திட்டமிட்டிருந்த மகிந்த தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட போது தான் தோல்வியடைந்து விட்டதை உணர்ந்தார். தற்போது சிறிலங்காவில் புதிய அதிபர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஜோன் கெரி சிறிலங்காவுக்கான தனது உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

1972 இற்குப் பின்னர் சிறிலங்காவுக்கு வருகை தந்திருந்த அமெரிக்காவின் முதலாவது இராஜாங்கச் செயலர் கொலின் பவல் ஆவார். இவர் 2005இல் சிறிலங்காவிற்கு வருகை தந்திருந்தார்.

சிறிலங்காவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு உதவிகளை வழங்குவதற்காகவே கொலின் பவல் சிறிலங்காவுக்கான தனது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அக்காலப்பகுதியில் சந்திரிகா குமாரதுங்க சிறிலங்காவின் அதிபராக இருந்தார்.

சிறிலங்காவின் முன்னாள் அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலப்பகுதியில் அமெரிக்க அதிகாரிகள் பெருமளவில் சிறிலங்காவிற்குப் பயணித்திருந்தனர். இதன் பின்னர் மீண்டும் 2002 இல் ரணில் விக்ரமசிங்க சிறிலங்காப் பிரதமராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் பல அமெரிக்க உயர் மட்டப் பிரதிநிதிகள் சிறிலங்காவுக்கு வருகை தந்திருந்தனர்.

2005 இல், அமெரிக்க அதிபராகக் கடமையாற்றிய ஜோர்ஜ் புஷ் தனக்கு முன்னர் அதிபராக இருந்த பில் கிளின்ரனை சிறப்புத் தூதுவராக சிறிலங்காவுக்கு அனுப்பியிருந்தார். அமெரிக்கப் பிரதிநிதிகளின் சிறிலங்காவுக்கான சுற்றுப்பயணங்கள், சிறிலங்காச் சூழலானது அமெரிக்காவுக்கு உகந்ததாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் சிறிலங்காவுடன் தனது உறவை மேலும் பலப்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா ஈடுபாடு காட்டியுள்ளது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

மகிந்த தனது ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவுடன் வித்தியாசமான நிலைப்பாட்டைக் கைக்கொண்டார். இவர் சீனாவுக்கு ஆதரவான, அமெரிக்காவுக்கு எதிரான ஒரு ஆட்சியாளராகத் தன்னை மாற்றிக் கொண்டார். எனினும், சிறிலங்காவானது சீன ஆதரவு நாடாக இருந்த போதிலும், அமெரிக்கா சிறிலங்காத் தீவு மீதான தனது நலனை இழக்கவில்லை. சீனா, சிறிலங்காவுடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணியபோது அமெரிக்கா இதனை மிகவும் உன்னிப்பாக அவதானித்தது.

அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் கொழும்பிற்கு வருகை தராது, இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா ஜெயராமுடன் சிறிலங்காவில் நிலவிய இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுக்களை மேற்கொண்டிருந்ததானது சிறிலங்கா தொடர்பான அமெரிக்காவின் வேறுபட்ட அணுகுமுறையைக் காண்பிக்கிறது.

அமெரிக்காவின் தற்போதைய அதிபர் பராக் ஒபாமா இரண்டு தடவைகள் இந்தியாவுக்கான தனது அரச முறைப் பயணத்தை மேற்கொண்டதுடன், இந்தியத் தலைவர்களுடன் தலைநகர் புதுடில்லியில் வைத்து சிறிலங்காப் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார்.

ஜோன் கெரி அமெரிக்க இராஜாங்கச் செயலராகப் பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்தார். ஆனால் இவர் சிறிலங்காவுக்கு வருகை தரவில்லை. ஜோன் கெரி அமெரிக்காவின் இராஜாங் கச் செயலராகப் பொறுப்பேற்பதற்கு முன்னரே சிறிலங்கா தொடர்பில் தனது ஈடுபாட்டைக் காண்பிக்கத் தொடங்கியிருந்தார்.

அமெரிக்க செனற்றின் வெளியுறவுகளுக்கான ஆணையகத்தின் தலைவராக ஜோன் கெரி பதவி வகித்த போது, இவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் சிறிலங்காவின் முக்கியத்துவம் தொடர்பாக கோடிட்டுக் காண்பித்திருந்தார். 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் சிறிலங்காவில் எவ்வாறான நிலைப்பாடு தோன்றியது என்பது இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'சிறிலங்காவை 'இழப்பதற்கு' அமெரிக்கா வழிவகுக்க முடியாது. அதாவது சிறிலங்கா மீதான தனது கொள்கையை அமெரிக்கா மாற்றியமைக்க வேண்டும் என்பது இதன் கருத்தல்ல. அல்லது சிறிலங்காவின் அரசியல் மற்றும் மனிதாபிமான மீறல்கள் குறித்து உண்மையான அக்கறை காண்பிக்கக் கூடாது என்பது இதன் கருத்தல்ல.

எமது உதவிகளை சிறிலங்காவுக்கு வழங்கி சிறிலங்காவுடன் அமெரிக்காவும் இதேபோன்று அமெரிக்காவுடன் சிறிலங்காவும் உறவுகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கொண்ட புதியதொரு அணுகுமுறையை அமெரிக்கா வரையறுக்க வேண்டும்.

அமெரிக்காவின் முதலீடானது பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் உறவுநிலையின் பாதுகாப்புப் பொறிமுறைகள் போன்றவற்றை அமெரிக்காவின் மூலோபாயத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறான அணுகுமுறையானது மிகவும் தேவையான அரசியல் சீர்திருத்தங்களை மிக வேகமாக ஊக்கப்படுத்த உதவும்.

இவ்வாறான அரசியல் சீர்திருத்தமானது இந்திய மாக்கடலில் அமெரிக்க மூலோபாய நலன்களை நீண்டகாலத்திற்குத் தக்கவைத்திருப்பதற்கு உதவும். அமெரிக்க மூலோபாயமானது தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல சிறிலங்காவின் சிங்களப் பகுதிகளிலும் முதலீடு செய்யப்பட வேண்டும்' என ஜோன் கெரி தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

கெரியின் அறிக்கையை நோக்கும் போதும், ஜோன் கெரி அமெரிக்க இராஜாங்கச் செயலராகப் பதவியேற்ற பின்னர் இவர் கைக்கொண்ட நடைமுறைகளும் சிறிலங்காவின் முன்னாள் அரசாங்கம் தன்னால் அமெரிக்காவுடன் இணைந்து சாதகமாகப் பணியாற்ற முடியும் என்கின்ற உந்துதலை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அது நடைபெறவில்லை.

ராஜபக்சாக்கள் தொடர்பில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை கடுமையான கோட்பாட்டை வரையறுத்த அதேவேளையில், இவர்களை மூலோபாய ரீதியில் கட்டுப்படுத்துவதற்காக ஜோன் கெரி, ராஜபக்சாக்கள் மீது மென்கோட்பாட்டைக் கடைப்பிடித்தார். கெரியின் இத்தகைய கோட்பாடு நன்மை அளித்தது.

தமது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் பணியாற்றுவதன் மூலம் ஜோன் கெரியை தம் பக்கம் கவர்ந்திழுக்க முடியும் என ராஜபக்சாக்கள் கருதிய போதிலும், கெரி தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ராஜபக்சாக்களை செயற்பட வைக்க முயன்றார். கெரி மிகவும் கம்பீரமானவர். கெரி யின் நிகழ்ச்சி நிரல் வெற்றியளித்தமை உறுதிசெய்யப்பட்டது. பின்னர், இந்திய மாக் கடலில் சீனாவின் செல்வாக்குப் பலவீன முற்றது. இதன்மூலம் இந்தியா வெற்றியையும் நலனையும் பெற்றது.

சிறிலங்காவில் நேர்மையானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு ராஜபக்சாக்களை சம்மதிக்க வைப்பதில் ஜோன் கெரி மிகப் பெரிய வெற்றி பெற்றார். தாங்கள் முட்டாள்கள் என தற்போது ராஜபக்சாக்கள் உணரமுடியும். மகிந்த அதிபர் தேர்தலில் தோல்வியுற்ற போதிலும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மகிந்தவை விட்டு விலகியுள்ள போதிலும், இவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாயவுடன் அமெரிக்கத் தூதரகம் தொடர்ந்தும் தொடர்பைப் பேணி வருவதாகக் கூறப்படுகிறது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அதிகாரிகள் மகிந்த தேர்தலில் தோல்வியுற்ற பின்னர், கோத்தபாயவைச் சந்தித்து உரையாடியதாகக் கூறப்படுகிறது. இன்று கொழும்பிற்கு வரும் கெரி மகிந்தவைச் சந்திப்பாரா என்பது தொடர்பாக, எவ்விதத்திலும் சுட்டிக்காட்டப்படவில்லை.

மைத்திரியிடம் கெரி எதனை வழங்கவுள்ளார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதில் ஆர்வமாக உள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் சிறிலங்கா தொடர்பான போர்க்குற்ற அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் கையளித்திருக்க வேண்டும். இதனை செப்ரெம்பர் மாதம் வரை தாமதப்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு அமெரிக்கா, ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்திடம் கோரியது.

இந்த அறிக்கை செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கையளிக்கப்படாவிட்டால், ஜோன் கெரி பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். போர்க்குற்றம் தொடர்பான அறிக்கையை செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டால், மைத்திரி பிரச்சினைக்கு முகங் கொடுக்க வேண்டியேற்படும்.

–நித்தியபாரதி–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேபாள நிலநடுக்கத்தால்

# பலி எண்ணிக்கை 6134 ஆக அதிகரிப்பு





**நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் பல்லாயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. இடிபாடுகளில் சிக்கியவர்களையும், உயிரிழந்தவர்களையும், மீட்கும் பணி கடந்த 6 நாட்களாக தீவிரமாக நடந்து வருகிறது. இதுவரை 6134 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.**

நிலநடுக்கத்துக்கு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரம் வரை இருக்கும் என்று நேபாள பிரதமர் கூறியிருந்தார். ஆனால் இடிபாடுகளுக்குள் இன்னமும் ஏராளமானவர்கள் கிடப்பதால் பலியானவர்கள் எண்ணிக்கை 15 ஆயிரத்தை எட்டக்கூடும் என்று நேபாள இராணுவ தலைமை தளபதி கவுரவ் ராணா தெரிவித்தார்.

நேபாள நாட்டின் கிராமப் பகுதிகளில் இடிந்த வீடுகள் இன்னமும் அகற்றப்படாமல் உள்ளது. பாதிக்கப்பட்ட பல கிராமங்களில் இனமும் மீட்புப்பணிகள் தொடங்கப்படவில்லை. மீட்புப் பணிகள் முழுமையாக முடிந்தால்தான் பாதிப்பு பற்றிய எல்லா விபரங்களும் தெரியவரும். நேபாளத்தில் மீண்டும் இயல்பு வாழ்க்கையை கொண்டு வர இந்தியா எல்லா வகை உதவிகளையும் செய்து வருகிறது. இந்தியாவின் 16 தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் நேபாளத்தில் முகாமிட்டு மீட்புப் பணிகளை தீவிரமாக செய்து வருகிறார்கள். இந்திய இராணுவத்தினர் காத்மண்டுவில் 2 இடங்களில் தற்காலிக வைத்திய சாலை அமைத்துள்ளனர்.

18 இராணுவ மருத்துவக் குழுக்கள் இடிபாடுகள் அகற்றப்படும் இடங்களில் மீட்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ இந்தியா இதுவரை 100 தொன் நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளது. இது தவிர 280 தொன் அளவுக்கு உணவு, குடிநீர், பால், பிஸ்கட் மற்றும் மருந்துகளை அனுப்பியுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக நேபாளத்தில் சுமார் 80 இலட்சம் பேர் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து தவிக்கிறார்கள். சுமார் 60 இலட்சம் பேரின் வீடுகள் முழுமையாக இடிந்து நாசமாகிவிட்டன. இதனால் அவர்கள் எந்த வாழ்வாதாரமும் இல்லாமல் நடுத்தெருவில் நிற்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. (இ-5)




# நிலநடுக்கம் உருவான பகுதியில் கிராமங்கள் முற்றிலும் அழிந்தன

நேபாளத்தில் நிலநடுக்கம் உருவான பகுதியில் கிராமங்கள் முற்றிலும் அழிந்து விட்டதாக செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் காத்மண்டுவில் இருந்து வடமேற்கே 80 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள லாம்ஜங் என்ற இடத்தை மையமாக கொண்டு 7.9 ரிக்டரில் நிலநடுக்கம் உருவானது.

இதில், காத்மண்டு, கீர்த்தி நகர், போக்ரா பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள், புராதன நினைவு சின்னங்கள் இடிந்து தரைமட்டமாயின. இங்கு மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதே நேரத்தில் நிலநடுக்கம் உருவான லாம்ஜங் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்கள் ஏறத்தாழ முற்றிலும் அழிந்து விட்டன. நிலநடுக்கம் ஏற்பட்டு 7 நாட்களாகியும் அப்பகுதிக்கு மீட்பு குழுவினரால் இன்னும் செல்ல முடியவில்லை. வீதிகள் அழிந்துவிட்டன.

ஹெலிகொப்டர்கள் பறந்து சென்று தரை இறங்க முடியுவில்லை. அந்த அளவுக்கு அப்பகுதி முழுவதும் இடிபாடுகளாக காட்சியளிக்கிறது. நிலநடுக்கம் உருவான லாம்ஜங் பகுதிக்கு செஞ்சிலுவை சங்கத்தை சேர்ந்த 6 குழுக்கள் சென்றன.

அவற்றில் சிந்துபால் சவுக் பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இது காத்மண்டுவில் இருந்து வடகிழக்கில் உள்ளது. அங்குள்ள சவுதாரா பகுதியில் 90 சதவீதம் வீடுகள் இடிந்து தரைமட்டமாகி கிடக்கின்றன.

அங்குள்ள வைத்தியசாலையும் இடிந்தது. மீட்பு குழு செல்ல முடியாததால் அப்பகுதி மக்களே இடிபாடுகளை தங்கள் கைகளால் அகற்றி தங்களது குடும்பத்தினரை மீட்டு வருகின்றனர். அவர்களை வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளிக்க முடியாமல் தவிக்கின்றனர். இது போன்று பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சிந்துபால் சவுக்கில் மட்டும் 40 ஆயிரம் வீடுகள் அழிந்து விட்டதாக சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்கள் தெரிவித்துள்ளன. அங்கு மட்டும் 1400 பேர் பலியாகி இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்று வரை 6130 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 13,827 பேர் காயம் அடைந்து இருப்பதாகவும் நேபாள அரசு அறிவித்துள்ளது. (இ-5)

## ஜனாதிபதியின் கொள்கையை எதிர்த்த

# இரண்டு அமைச்சர்களுட்பட 5 பேருக்கு மரணதண்டனை

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் கொண்டு வந்த கொள்கைகளை எதிர்த்த அமைச்சர்கள் உட்பட 15 பேருக்கு அந்நாட்டில் மரண தண்டனை கடந்த புதன்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்கொரிய உளவு நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், ஜனாதிபதியின் கொள்கைகளை எதிர்த்ததற்காக 2 அமைச்சர்களுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதிலும் வட கொரியாவில் காடு பகுதிகளை அதிகரிக்க வேணடும் என்ற திட்டத்தை எதிர்த்த குற்றத்துக்காகவே மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பது பலரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தீவிரவாதிகளிடமிருந்து மேலும் 160 பெண்கள், குழந்தைகள் மீட்பு

போகோஹறாம் தீவிரவாதிகளிடமிருந்து மேலும் 160 பெண்கள் மற்றும் குழந்தைகளை நைஜீரிய இராணுவம் நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள சாம்பிசா வனப் பகுதியில் போகோஹறாம் தீவிரவாதிகளுடன் நடந்த மோதலின் போது முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வெவ்வேறு வயதையுடைய 100 சிறுவர், சிறுமிகள் மற்றும் 60 பெண்களை இராணுவம் மீட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு 3 முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 300 சிறுமிகள் மற்றும் பெண்களை இராணுவம் மீட்டது. இவர்களில் 200 சிறுமிகளும் 93 பெண்களும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மீட்கப்பட்டவர்களில் யாரும், கடந்த ஏப்ரலில் சிபோக் என்ற நகரின் கிறிஸ்தவ உண்டு உறைவிட பள்ளியிலிருந்து கடத்திச் செலலப்பட்ட, 219 சிறுமியர் இல்லை என தெரியவந்துள்ளது.

எனவே கடத்தி செல்லப்பட்ட சிறுமிகளின் நிலை பற்றி தெரியவில்லை. அவர்கள் இன்னும் பயங்கரவாதிகள் பிடியில் தான் உள்ளதாக கருதப்படுகிறது. (இ-5)

# எந்த இரத்தப் பிரிவையும் அனைவரும் ஏற்கும்படி மாற்றும் திறன் கண்டுபிடிப்பு

தானம் வழங்கப்படும் இரத்தம் எந்தப் பிரிவாக இருந்தாலும், அதை எந்த வகை இரத்தப் பிரிவினருக்கும் செலுத்துவதற்கேற்ப மாற்றும் முறையை கனடா நாட்டு ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

சில சமயங்களில், நோயாளிகளுக்கு அவசரமாக இரத்தம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிலையில், இரத்த வங்கியில் அவருக்கேற்ற பிரிவு இரத்தம் கிடைக்காமல் போய்விடும்.

இந்தப் பிரச்சினைக்கு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் இரத்த ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த ஆய்வுக்குழு தீர்வு கண்டுள்ளது.

அனைத்துப் பிரிவு இரத்தத்தையும், அனைவருக்கும் செலுத்துவதற்கேற்ப மாற்றம் செய்வதற்கென ஒரு புதிய நொதியத்தை (என்ஸைம்) இந்தக் குழு உருவாக்கியுள்ளது.

இந்த நொதியம், ஏ பிரிவு இரத்தத்திலும், பி பிரிவு இரத்தத்திலும் மட்டுமே காணப்படும் உடற்காப்பு ஊக்கிகளை (ஆன்டிஜென்) பிரித்து எடுக்கிறது. இதனால் அந்த இரத்தம், "ஓ" பிரிவு இரத்தத்தின் தன்மையைப் பெறுகிறது.

ஓ பிரிவைச் சேர்ந்த இரத்தத்தை, அனைத்து இரத்தப் பிரிவினருக்கும் செலுத்த முடியும் என்பதால் இந்த என்ஸைம் செலுத்தப்பட்ட ஏ, பி பிரிவு இரத்தத்தையும் அனைத்து நோயாளிகளுக்கும் செலுத்த முடியும்.

ஏ, பி பிரிவு இரத்தங்களிலிருந்து உடற்காப்பு ஊக்கிகளைப் பிரித்தெடுப்பது குறித்து ஏற்கனவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அதற்கான நொதியத்தை "பரிணாம வளர்ச்சி இயக்கம்" என்ற புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கியிருக்கிறார்கள்.

இதனால், அந்த நொதியம் பன்மடங்குத் திறனுடன் இரத்தத்திலிருந்து உடற்காப்பு ஊக்கிகளைப் பிரித்தெடுப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த முறையைப் பின்பற்றி எந்தப் இரத்தப் பிரிவினருக்கும், அனைத்துப் பிரிவு இரத்தத்தையும் செலுத்துவது விரைவில் சாத்தியமாகக் கூடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# கட்டுப்பாட்டையிழந்த ரஷ்யாவின் விண்கலம்

## எங்கு விழுமோ என்ற அச்சத்தில் விஞ்ஞானிகள்

ரஷ்யா அனுப்பிய ஆளில்லாத விண்கலம் கட்டுப்பாட்டையிழந்து புவியீர்ப்பு சக்தியின் மூலம் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதால், அந்த விண்கலம் எங்கு விழுமோ என்ற அச்சத்தில் விஞ்ஞானிகள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள விஞ்ஞானிகளுக்கு தேவையான பொருட்களுடன் ஆளில்லா விண்கலம் ஒன்றை ரஷ்யா அனுப்பியது. ஆனால் பாதி வழியிலேயே விண்கலம் கட்டுப்பாட்டை இழந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

இது பூமிப்பரப்பில் விழுந்தால் மிகப்பெரிய சேதம் ஏற்படும் என்பதால், அதனை கடலில் விழ வைக்கும் முயற்சியில் ரஷ்ய விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் பாவச் செயலை இலங்கை செய்யாது

## அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**கடலில் எல்லை தாண்டிவரும் மீனவர்களை துப்பாக்கியால் சுடும் பாவச் செயலை இலங்கை அரசு செய்யாது. எனினும் சுடுவதற்கான சட்டம் இருப்பதையும் நினைவிற் கொள்ளவேண்டுமென மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**



காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் கோயிலுக்கு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேற்று வெள்ளிக்கிழமை சுவாமி தரிசனம் செய்ய சென்றார்.

மூலவர் ஸ்ரீதர்பாரண்யேஸ்வரர்,ஸ்ரீபிரணாம்பிகை மற்றும் தனி சந்நிதி ெ காண்டிருக்கும் ஸ்ரீ சனீஸ்வரபகவானை தரிசனம் செய்த அவர், செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

இந்திய மற்றும் இலங்கை அரசுகளிடம் எல்லை தாண்டுவோர் தண்டிக்கும் சட்டங்கள் உள்ளன. எல்லை தாண்டி வருவோரை சுடுவோம் என நானோ எங்களது அரசோ கூறவில்லை. அனைவரும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அந்தந்த நாட்டின் எல்லையை காப்பது அந்தந்த நாட்டின் கடமையாகும். இதை செய்யும்போது அந்நியர் எல்லைக்குள் நுழைந்தால் சுடுவதற்கு ஒவ்வொரு நாட்டிலும் சட்டம் உள்ளது. இதைத்தான் கூறுகிறோமே தவிர, இந்திய மீனவர்கள் இலங்கைக்கு வந்தால் சுடுவோம் என கூறவில்லை. அந்த பாவச் செயலை இலங்கை அரசு செய்யாது.

எல்லை தாண்டுவோரை தண்டிக்க இருக்கும் சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்போம். இருக்கும் தண்டனையை குறைக்கவோ, மாற்றவோ முடியாது. இலங்கையில் புதிய அரசு அமைந்துள்ளது. நாங்கள் ஜனநாயக ரீதியில் செயலாற்ற விரும்புகிறோம்.

இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்கள் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டுமென்பதே எங்கள் அரசின் கொள்கை.இந்திய மீனவர்கள் பிரச்சினை குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், ஜனாதிபதி, பிரதமரும் பேசிவருகின்றனர். இரு அரசுகளும் இணைந்து பிரச்சினைக்கு தீர்வு காணும். குறிப்பாக இந்திய பிரதமர் நல்ல முடிவை எடுப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிரான குற்றப் பிரேரணையில் 90பேர் கைச்சாத்து

மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிரான குற்றப் பிரேரணையில் 90 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பாரிய நிதி மோசடியுடன் தொடர்பு பட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

4500 கோடி ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட ஒரு நபர் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு பொருத்தமற்றவர் என தெரிவித்து குற்றப் பிரேரணை யோசனையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையில் 90 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த ஆவணம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் விரைவில் அர்ஜுன் மகேந்திரனை பதவி விலக்க முடியும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். (இ-5)

## வடக்கு,கிழக்கைச் சேர்ந்த இளைஞர் இருவர் கைது

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் இருவரை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரகசிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலியான கடவுச்சீட்டு மற்றும் விசா ஆகியவற்றை பயன்படுத்தி இத்தாலிக்கு செல்வதற்கு முயன்றபோதே அவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த 28 மற்றும் 31 வயதுகளுடைய இளைஞர் என்று தெரியவருகின்றது.

அவ்விருவரும் டுபாய் ஊடாக இத்தாலிக்கு செல்வதற்காக போலியான ஆவணங்களை தயாரித்து கொண்டு விமான நிலையம் வந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி ஆவணங்களை தயாரிப்பதற்காக ஒரு இளைஞனிடமிருந்து 35 இலட்சம் ரூபாவை முகவர் ஒப்பந்தம் பேசியதாகவும் இத்தாலிக்கு சென்றதன் பின்னர் அப்பணத்தை தருவதற்கு அவ்விளைஞர்கள் இருவரும் முகவருக்கு உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

சந்தேகநபர்கள் இருவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## அரசியலமைப்புப் பேரவையில் எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அமைய அரசியலமைப்பு பேரவையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித்.பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் அரசியலமைப்பு பேரவைக்கு 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத மூன்று பேரும் நியமிக்கப்படவுள்ளனர்.

அரசியலமைப்பு பேரவைக்கு சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உத்தியோகபூர்வமக தெரிவு செய்யப்படுவார்கள்.

பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் பரிந்துரைகளின் அடிப்படையில் சபாநாயகரின் அனுமதியுடன் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத மூன்று பேரும் நியமிக்கப்படுவர் எனத் தெரிவித்தார். (இ-5)

## மக்கள் ஏன் வாக்களித்தனர் அமைச்சர் ரவி கூறும் விளக்கம்

(கொழும்பு)

நாட்டை ஒரு குடும்பம் ஆள்வதா அல்லது 210 இலட்சம் குடும்பங்கள் ஆள்வதா? என்ற சிந்தனையிலேயே ஜனவரி 8ஆம் திகதி பெருமபாலான மக்கள் வாக்குகளை பயன்படுத்தியதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்து நல்லாட்சியை ஏற்படுத்தி அதனை மக்கள் பயன்படுத்திக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்கள் சிலருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் வார்த்தையையே தாம் தடை செய்துள்ளதாகவும் தனியார் துறையைவிட முன்னோக்கிச் செல்ல அரச ஊழியர்கள் செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அரச நிறுவனங்களின் வருமானத்தை 15ஆல் உயர்த்தி செலவை 10ஆல் குறைக்க அனைவரும் முன்வர வேண்டும் என்றும் முற்பகல் 10 மணிக்கு வேலைக்குச் சென்று பிற்பகல் 3. மணிக்கு வீடு திரும்பலாம் என்ற சிந்தனையில் இருந்து மீளவேண்டும் என்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி நடராஜா பொன்னம்மா

கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா பொன்னம்மா கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தியாகராஜா ஞானேந்திரன்

அளவெட்டியை பிறப்பிடமாகவும் மீசாலை ,கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா ஞானேந்திரன் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் MT Laviniya மயானத்தில் பி.ப ஒரு மணியளவில் தகனம் செய்யப்படும்.



### நல்லப்பா கோபாலகிருஷ்ணன்

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாMontreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லப்பா கோபாலகிருஷ்ணன் கடந்த 29ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பி.ப.3.30 மணியளவில் 55Rue Gince,Montreal,QC H4N 1J7,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஐயாத்துரை தியாகராஜா

தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடா Bramptol ஐ வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை தியாகராஜா நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை St John's Dixie Cemetery & Crematorium,737 Dundas St E,Mississauga,ON L4Y 2B5,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### அல்பிரட் றொபேட்

ஆதியாமலை உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் நாவலடி உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் றொபேட் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் உலக இரட்சகர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வல்வை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி கந்தசாமி சின்னத்தங்கச்சி

சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சின்னத் தங்கச்சி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர்பூதவுடல் அளவெட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சின்னையா சபாரத்தினம்

சுதுமலைதெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சபாரத்தினம் கடந்த 27ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதத் தலைவர்களை கண்டிக்க வேண்டும்

சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவிக்கும் இந்திய மதத்தலைவர்களைக் கண்டிக்குமாறு இந்தியாவிடம் அமெரிக்க அரசு வலியுறுத்த வேண்டும் என்று மத சுதந்திரத்துக்கான சர்வதேச ஆணையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட இந்த ஆணையம், தனது ஆண்டறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இந்தியாவுடனான நல்லுறவின் ஒரு பகுதியாக மதச் சுதந்திரம் குறித்த பேச்சுவார்த்தையை அந்நாட்டுடன் நடத்துவதில் அமெரிக்கா அக்கறை கொள்ள வேண்டும். மதரீதியான வன்முறைச் சம்பவங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கவும் காவல் துறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க அரசு ஊக்குவிக்க வேண்டும்.

மதரீதியாக சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவிக்கும் மதத் தலைவர்கள், அரசு பொறுப்பு வகிப்பவர்களைக் கண்டிக்குமாறு இந்தியாவை அமெரிக்க அரசு வலியுறுத்த வேண்டும்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள மதமாற்றத் தடைச் சட்டங்களை இரத்து செய்யவோ அல்லது அதில் திருத்தம் மேற்கொள்ளவோ அந்நாட்டு அரசு நடவடிக் கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மீனவர்கள் விவகாரத்தில் மத்திய அரசை கொச்சைப்படுத்துவதை அனுமதிக்க முடியாது

தமிழக மீனவர்கள் விவகாரத்தில் மத்திய அரசைக் கொச்சைப் படுத்துவதை அனுமதிக்க முடியாது என்று பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தமிழக மீனவர்களிடம் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாகப் பேசி, அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டது உள்ளத்தைத் தொடுவதாக அமைந்திருந்தது. மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் உயர, மத்திய அரசு எவ்வளவு முதலீடு வேண்டுமானாலும் செய்யத் தயார் என்று சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். ஆனால்,




அவர் கூறியதை அறியாமல் சிலர் அறிக்கை விடுவது, நியாயமில்லை. எல்லை தாண்டி மீன்பிடித்தால் அங்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களும் தமிழக மீனவர்கள் என்ற காரணத்தினாலும், சர்வதேச கடல் சட்டதிட்டங்களால தொல்லைகள் ஏற்பட்டு மீனவரகள் வாழ்க்கை பாதித்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலுமே எல்லை தாண்டி மீன் பிடிக்கக் கூடாது என்று சுஷ்மா கூறியுள்ளார். இந்த நல்ல எண்ணத்தைக் கொச்சைப்படுத்து வதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

மேலும், மதுரை உயர் நீதிமன்றத்தில், இலங்கையில் தமிழக மீனவர்கள் மீது பல கடத்தல் வழக்குகள் போடப்பட்டுள்ளதை கடலோர காவற்படை அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நிலையில் ஏதோ தமிழக மீனவர்கள் என்றாலே கடத்தல்காரர்கள் என்று மத்திய அரசு கூறிவிட்டதைப் போல கலகம் ஏற்படுத்துவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்தார். (இ-5)

# இந்தியாவில் மத சகிப்புத்தன்மை மோடியால் குறைந்து விட்டது

## சர்வதேச மத சுதந்திர ஆணையம் குற்றச்சாட்டு



**(வோஷிங்டன்)**

**அமெரிக்க அரசால் உலக நாடுகளில் பேணப்படும் மத சுதந்திரம் பற்றி கண்காணித்து அறிக்கை அளிக்க அமைக்கப்பட்டுள்ள சர்வதேச மத சுதந்திர ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மோடி அரசு ஆட்சியேற்ற பின்னர் நாட்டில் மத சகிப்பு தன்மை குறைந்துவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

ஆனால் அமெரிக்க அரசின் சர்வதேச மத சுதந்திர ஆணையத்தின் குற்றச்சாட்டை மத்திய அரசு மறுத்துள்ளது.

மேலும் அந்த அறிக்கை யில் தாய் மதத்துக்கு திரும்புதல் எனும் பெயரில் மத மாற்றம், மத மாற்ற பிரசாரம், பாஜக தலைவர்கள் சிறுபான்மையினர் மற்றும் சமய அமைப்புக்கள்' பற்றி இழிவாக பேசுவது ஆகியவை அதிகரித்து இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி கருத்து தெரிவித்துள்ள வெளியுறவு செய்தி தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் "இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் மத சுதந்திரம் பற்றி வெளிவந்திருக்கும் அறிக்கை எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. அந்த அறிக்கை இந்தியாவை பற்றியும் அதன் சட்டதிட்டங்கள் பற்றியும் முழுமையான புரிதல் இல்லாமல் உருவாக்கப்பட்டுள்ளது.

இது போன்ற அறிக்கைகள் மீது நாங்கள் எவ்வித கவனமும் செலுத்த போவது இல்லை" என தெரிவித்துள்ளார். (இ-5)

# காஷ்மீர் குடியிருப்பு முயற்சி ஐ.நா.தீர்மானத்துக்கு எதிரானது

(டில்லி)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில், பள்ளத்தாக்குப் பகுதியில் புதிய குடியிருப்புகளை அமைக்க இந்தியா முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும், இது ஐ.நா. தீர்மானங்களுக்கு எதிரானது என்றும் பாகிஸ்தான் தெரிவித்தது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இருந்து புலம்பெயர்ந்த பண்டிட்டுகளை மீள்குடியேற்றம் செய்வதற்காக, பள்ளத்தாக்குப் பகுதியில் தனிக் குடியிருப்புகள் அமைக்கப்படும் என மத்திய, மாநில அரசுகள் அறிவித்திருந்த நிலையில் பாகிஸ்தான் இவ்வாறு கூறியுள்ளது. இது குறித்து, அந்நாட்டு வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் தஸ்னீம் அஸ்லாம், இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூறியதாவது,

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் வெளியாட்களை குடியமர்த்துவதன் மூலம், மக்கள் தொகை விகிததை மாற்ற இந்தியா முயலுகிறது. பள்ளத்தாக்குப் பகுதியின் நில அமைப்பை மாற்றும் வகையில், அப்பகுதியில் தனிக்குடியிருப்புகளை அமைக்க முயலுவது ஐ.நா. தீர்மானங்களுக்கு எதிரானதாகும் எனத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி அருணாசலப் பிரதேசம்-வி.கே.சிங்

(டில்லி)

இந்தியாவின் ஒருங்கிணைந்த, மாற்றப்படமுடியாத பகுதி அருணாசலப் பிரதேசம் என்று பல சந்தர்ப்பங்களில் சீனாவிற்கு தெளிவுபடுத்தியுள்ளதாக, மத்திய அரசு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

இதுகுறித்து மாநிலங்களவையில் வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.கே.சிங் தெரிவிக்கையில், இந்திய-சீன உறவு தொடர்ந்து வளர்வதற்கு எல்லையில் அமைதி நிலவ வேண்டியது அவசியமென்று இரண்டு நாடுகளும் பரஸ்பரம் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும்.

அருணாசலப் பிரதேச மாநிலத்தில் இந்தியா, சீனா இடையேயான சர்வதேச எல்லைப் பகுதியான 90,000 சதுர கிலோ மீற்றர் பகுதியை தனது பகுதி என்று சீனா சர்ச்சைக்குள்ளாக்குகிறது.

இந்தியாவின் ஒருங்கிணைந்த, பிரிக்க முடியாத பகுதி அருணாசலப் பிரதேசம் என்று சீனாவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தை சீனாவின் உயர்மட்ட தரப்பினர் உட்பட பலருக்கும், பல சந்தர்ப்பங்களில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

இரு தரப்பிற்கிடையில் உள்ள பிரச்சினைகளை பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில், அமைதியான பேச்சு வார்த்தை மூலம் மட்டுமே தீர்க்க முடியுமென்று இரண்டு நாடுகளும் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளன என்று வி.கே. சிங் தெரிவித்தார். (இ-5)

# திருமணத் தம்பதியினர் உட்பட 15பேர் வீதி விபத்தில் மரணம்

மேற்குவங்கத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் புதுமணத் தம்பதி உட்பட 15 பேர் பலியாகியுள்ளனர். மேற்குவங்க மாநிலம் மடாரிஹட் மாவட்டத்துக்கு அருகே தேசிய நெடுஞ்சாலை எண் 31-ல் இந்தக் கோர விபத்து நடந்துள்ளது.

சம்பவம் குறித்து பொலிஸ் எஸ்.பி. ஆகாச்ஜ் மேகாரியா கூறும்போது, "திருமண தம்பதியினர் சென்ற வாகனமும் எதிரே வந்த டிரக்கும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் புதுமணத் தம்பதி உட்பட 12 பேர சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிகிச்சை பலனின்றி 3 பேர் இறந்தனர். மேலும் 3 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. விபத்து குறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். டிரக்ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார" என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)




# நிலநடுக்க நிவாரணம் மோடிக்கு ஷெரீப் பாராட்டு

(டில்லி)

நேபாளம் மற்றும் நாட்டின் வட மாநிலங்களில் ஏற்பட்ட நிலநடுக்கம் தொடர்பாக, பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் அழைத்துப் பேசிய, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், நேபாளத்துக்கு இந்தியா உதவி வருவதை பாராட்டினார். நேபாளம் மற்றும் இந்தியாவில் வட மாநிலங்களில், கடந்த சனிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேபாளத்தில் 6 ஆயிரத்தை தாண்டியுள்ள நிலையில், இந்தியாவில் 78 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில், 58 பேர் பீஹாரையும், 16 பேர் உத்தரப் பிரதேசத்தையும், 3 பேர் மேற்கு வங்கத்தையும், ஒருவர் ராஜஸ்தானையும் சேர்ந்தவர்கள்.

நேபாள பூகம்ப நிவாரண பணிகளில், இந்தியா முழுவீச்சில் இறங்கி உதவி செய்து வருகிறது. இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், பிரதமர் நரேந்திர மோடியை, நேற்று முன்தினம் தொலைபேசியில் அழைத்து பேசினார். அப்போது, வட மாநிலங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உண்டான பாதிப்பு குறித்து, ஷெரீப் இரங்கல் தெரிவித்ததோடு, நேபாளத்துக்கு இந்தியா செய்துவரும் உதவியை, அவர் பாராட்டியுள்ளார். (இ-5)

# மீனவர்களை பாதுகாக்கும் பொறுப்பை மத்திய அரசாங்கம் தட்டிக் கழிப்பதா?

மீனவர்களை பாதுகாக்கும் பொறுப்பை மத்திய அரசு தட்டிக் கழிப்பதா? என பா.ம.க. நிறுவுனர் மருத்துவர்ராமதாஸ்கேள்விஎழுப்பியுள்ளார்.

இது குறித்து பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், எல்லை தாண்டி மீன்பிடிக்க சென்றால் அதனால் ஏறபடும் விளைவுகளுக்கு தமிழக மீனவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும் என வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எச்சரித்துள்ளதாக தெரிவித்தார். எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்வோம் என இலங்கை பிரத



மர் ரணில் விக்கிரமசிங்க மிரட்டல் விடுத்து வரும் நிலையில், மீனவர்கள் பிரச்சினையை தட்டிக் கழிக்கும் விதமாக மத்திய அரசும் நடந்து கொள்வது அதிர்ச்சியளிப்பதாக ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் மீனவர் பிரச்சினை தொடர்பான வழக்கில், தங்கம் மற்றும் போதைப் பொருள் கடத்தலில் மீனவர்கள் ஈடுபடுவதாக மத்திய அரசு கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது எனவும் தெரிவித் துள்ளார்.


அதேபோல் மீனவர்களின் நிலை என்ன? எந்த சூழலில் அவர்கள் மீன் பிடிக்கிறார்கள்? என்பதையெல்லாம் ஆராய்ந்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் சூழ்ச்சி தொடர்பில் விசாரணை நடத்தக்கோரி உண்ணாவிரதப் போராட்டம்

**(கொழும்பு)**

**2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அதிகாலை அலரி மாளிகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையில் இடம்பெற்ற சூழ்ச்சி தொடர்பில் விசாரணை நடத்தக் கோரி ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.**




கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இந்த போராட்டத்தை அவர் நேற்றுக்காலை ஆரம்பித்துள்ளார்.

இந்தச் சூழ்ச்சி திட்டம் தொடர்பில் ஜே.வி.பி. அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என்று சோமவன்ச ஏற்கனவே கோரிவந்தார். அந்தக் கோரிக்கை உட்பட பல விடயங்களை ஜே.வி.பி. நிறைவேற்றவில்லை என்பதைகாரணம்காட்டி அண்மையில் அவர் கட்சியில் இருந்து விலகினார். இந்நிலையிலேயே நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை அவர் ஆரம்பித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த வேளை, ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அதிகாலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை தக்க வைக்க சூழ்ச்சி மேற்கொண்டார் என்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் சோமவன்ச உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேர்தல் முறைமையில் மாற்றம் செய்ய வேண்டும்

### மல்வத்து பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்த அர்ப்பணிப்பு வரவேற்கப்பட வேண்டியது.

ஜனாதிபதியின் அதீத அதிகாரங்களை குறைத்துக்கொள்ள சுய விருப்பின் அடிப்படையில் முன்வந்தமை முழு உலகிற்கும் சிறந்த முன்னுதாரணமாகும்.

அண்மைய வரலாற்றில் எந்தவொரு அரச தலைவரும் அதிகாரங்களை குறைத்துக்கொள்ள விரும்பியதில்லை.

1978 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி செய்த பல அரச தலைவர்கள் நிறைவேற்று அதிகாரத்தை இரத்து



செய்வதாக வாக்குறுதி அளித்த போதிலும் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

மேலும் அவர்கள் சர்வாதிகார ஆட்சி நோக்கியே நகர்கின்றார்கள்.

தற்போதைய தேர்தல் முறைமை ஊழல் மோசடிகளில் ஈடுபடுவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

ஊழல் மோசடிகள் மிக்க தேர்தல் முறைமையை மாற்றி நியாயமான ஒர் தேர்தல் முறைமை அறிமுகம்செய்யப்பட வேண்டுமென அவர மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## மரண தண்டனைக்கு பின்னர் இந்தோ. தூதுவரின் அறிக்கை

அவுஸ்திரேலியாவின் நல்ல உறவு இந்தோனேஷியாவிற்கு மிகவும் முக்கியம் என இந்தோனேஷியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியப் பிரஜைகளான மயூரன்- அன்ட்ரூசான் ஆகியோருக்கு இந்தோனேஷியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில், அந்நாட்டு மக்களிடையே பல்வேறு கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

இது தொடர்பில் இந்தேனேஷியாத் தூதுவர் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

1. பாலி ஒன்பது போதைப் பொருள கடத்தல் கும்பல் தலைவர்களுக்கு எதிராக அமுலாக்கப்பட்ட சட்டநடவடிக்கைகள் குறித்து மக்கள் மற்றும் அவுஸ்திரேலியா அரசாங்கம் வெளிப்படுத்தும் கருத்துக்களை இந்தோனேஷியா புரிந்து கொண்டுள்ளது.

2.இந்தோனேஷியா அரசாங்கமும்,நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும், நண்பர்களுக்கும் தங்கள் அனுதாபங்களை வெளிப்படுத்தியுள்ளது.

3.இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா உறவிற்கு இது ஒரு கடினமான மற்றும் சவாலான காலமாகும்.

4. அவுஸ்திரேலியாவின் நல்ல உறவு இந்தோனேஷியாவிற்கு மிகவும் முக்கியம். இந்தோனேஷியாவுடனான நல்ல உறவு அவுஸ்திரேலியாவிற்கும் அவசியம் என்று நாங்கள் நம்புகின்றோம். இருதரப்பு உறவுகளையும் மேம்படுத்தி வலுவடைய செய்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேஷியா மக்களுக்கு இடையே தற்பொழுது தனிப்பட்ட, கலாசார, வணிக மற்றும் கல்வி இணைப்புகள் வலுவாக உள்ளதென நாம் நம்புகின்றோம்.

5.இருதரப்பு உறவுகளை மீள்கட்டமைப்பு செய்வது முக்கியமாகும். புறநிலை ஊடக தகவல் மற்றும் அறிக்கைகளில் எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அவசியம். அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேஷியா மக்களுக்கு இடையில் தவறான காரணங்களினால் காணப்படுகின்ற இடைவெளியினை நீக்குவதற்கு ஊடகங்களின் பங்களிப்புகள் மதிக்கத்தக்கதாகும் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாராளுமன்றம் கலைக்கப்படும்

### கயந்த கருணாதிலக்க

ஒரு சில நாட்களுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்படும் என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

20 ஆம் அரசியலமைப்பு திருத்தச்சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தகவல் அறிந்து கொள்ளும் சட்ட மூலம் அவசர சட்ட மூலமாக பாராளுமன்றில் சமர்ப்பிப்பதில்லை எனவும் சாதாரண நடைமுறைகளை பின்பற்றி இந்த உத்தேச திருத்தச் சட்டங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும்



அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்தில் உள்ள உண்மைகள் பற்றி மக்கள் மேலும் புரிந்துணர்வு பெற்றுக்கொள்வதற்காக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

### இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல் சேவை ஆரம்பித்தால்

## முன்னேற்றகரமான மாகாணமாக வடக்கு அபிவிருத்தி அடையும்

### மீன்பிடி அமைச்சர் நம்பிக்கை

வடக்கு மாகாணத்தை மையமாக வைத்து இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் குறுகிய காலத்தில் மிக விரைவாக ஏனைய மாகாணங்களை விட முன்னேற்றகரமான மாகாணமாகி வடக்கு மாகாணம் அபிவிருத்தி அடையும் என வடக்கு மாகாண சபை மீன்பிடி போக்குவரத்துதுறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்காலிக பணியில் இருந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பாவனை செய்வது உதாசீனம் செய்வ,து பராமரிப்பில் அக்கறை இன்மை போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலை மாறவேண்டும் . வரி பணத்தில் இருந்து கிடைக்கப்பெறும் இச் சொத்துக்களை சரியான முறையில் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அதேபோன்று தான் அரச வேலைகளை அர்ப்பணிப்புடன் செய்யவேண்டும்.

எமது மாகாணம் முன்னேற்றம் அடைய வேண்டும்என்றால் அனைவரிடத்திலும் ஒற்றுமை இருக்க வேண்டும். கடந்த காலங்களில் நாம் பல இழப்புக்களை சந்தித்துள்ளோம். தியாகங்களை செய்துள்ளோம்.

அந்த தியாகங்களுக்கு அர்த்தம் கிடைந்த வேண்டும் என்றால் எம்மிடையே ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும்.

சமயம் ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் இனம் சார்பாகவும் தற்போது பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இவை தொடர்ந்தால் பாரிய விளைவை வடக்கு மாகாணம் எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இனங்களுக்கு அப்பால் சென்று பல வேலைகளை கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருப்பதால் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

இரு சமயங்களுக்கிடையே பிரச்சினைகள் தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களுக்கு பின்னர் எமது வடக்கு மாகாணம் இன்னும் பின்நோக்கிய பிரதேசமாகக் காணப்படும். எந்த காரணத்தை கொண்டும் முன்னேற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவோம்.

தூரநோக்கு சிந்தனையை மனதில் வைத்து வடக்கு மாகாணத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒற்றுமையுடனும் தியாகத்துடனும் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும்என அவர் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லாத போது வாயை மூடிக் கொள்ளுங்கள் சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள் சொல்வதை தீப்பொறி எழச் சொல்லுங்கள்.
– பெஞ்சமீன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னை மாற்றவேண்டும்

ஒருவரைப் பற்றி அறியவேண்டுமாயின் அவருக்கு அதிகாரத்தைக் கொடுத்துப் பார்க்கவேண்டும் என்பது ஒரு பொது நியதி.

நல்ல மனிதர்களாக இருந்த பலர் பணம், பதவி, அதிகாரம் என்பவற்றால் மிக மோசமாகிப்போன வரலாறுகள் நிறையவே உண்டு.

அப்படியானால் நல்ல மனிதர் என்போர் எந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் தமது உயர்ந்த பண்பு நிலையில் இருந்து ஒருபோதும் பிறழ்வடைய மாட்டார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் மாற்றமடைந்தாலும் மேன்மக்கள் மேன்மக்களாகவே வாழ்வதென்பதும் இந்த உலகம் நமக்கு உணர்த்திய உண்மை.

இந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இயலில் நல்லவர் என்று அவரோடு கற்றவர்கள், உடன் பழகியவர்கள் சொல்வர். இதை இப்போது நாம் சொன்னால் சவுதித் தண்டனைப்படி சொன்னவரை கல்லால் அடித்துக் கொல்லுங்கள் என்று கோஷம் கேட்கும். அந்தளவுக்கு அவர் தமிழ் மக்களின் எதிரியாகிப் போனார்.

ஜனாதிபதி என்ற அதிகாரப் பதவி அவருக்குக் கிடைத்தபோது அவர் முதலில் தனது நல்ல குணத்தை இழந்தார். அவரின் சகோதரர்கள்; பந்தம் பிடிப்போர் எனப் பலரும் சேர்ந்து மகிந்த ராஜபக்ஷவை தவறான பாதைக்கு இட்டுச் சென்றனர். இதன் காரணமாக வன்னிப் போரில் தமிழ் மக்கள் வதைபடுவது கண்டும் அவர் இரும்பு மனிதராக இருந்தார்.

போரின் பின்பு வட பகுதியில் அமைத்த வீதிகள், புகையிரதப் பாதைகள், வைத்தியசாலைகள் என்பன தான் செய்த பாவத்திற்கான பரிகாரமாக மகிந்த ராஜபக்ஷ கருதியிருக்கலாம். வட பகுதிக்கான வீதி நிர்மாணத்தில், புகையிரதப் பாதை அமைப்பதில் அவரிடம் கஞ்சத்தனம் இருக்கவில்லை என்ற கருத்தும் இருக்கவே செய்கிறது.

எதுவாயினும் பிள்ளையை பறிகொடுத்த தாயின் பரிதவிப்பில் உடைந்த வீதியும் காப்பற் வீதியும் ஒன்றாகவே புலப்படும் என்ற உண்மையையும் இங்கு சொல்லித்தானாக வேண்டும்.

எதுவாயினும் அதிகாரம் கிடைத்ததால் நல்ல மனிதர்கள் மோசமானவர்களாக மாறியது போல மோசமானவர்களாக இருந்த பலர் கிடைத்த பதவியால் திருந்திய மனிதர்களாக–புனிதர்களாக மாறினர் என்ற செய்திகளும் நிறையவே உண்டு.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க அரிசி கொடுத்த ராசா, உமி கொடுத்த ராசா இதில் நல்லவர் யார் என்ற அளவிலேயே சமகாலத்து நிலைமை உள்ளது.

உமி தருபவரை விட அரிசி தந்த ராசா பரவாயில்லை அல்லவா? என்று திருப்திப்படும் அளவில் தான் நாட்டுத் தலைவர்கள் இருக்கின்றனர் என்ற அடிப்படையில் நல்லவர்களாக இருக்கின்றவர்கள் அரசியல் என்னும் சாக்கடையில் வீழ்ந்து எழும் போது நடிப்பும், நாடகமும் ஊழலும் போலித்தனமும் ஒட்டிக் கொள்கிறது. இதில் இருந்து விடுபடுவது முடியாது என்றாகி விட்ட நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஒரு வித்தியாசமானவராக அவதானிக்கப்படுகிறார்.

தனக்கு இருந்த அதிகாரங்களைக் குறைப்புச் செய்தது மட்டுமன்றி நான்கு ஆண்டுகளுக்குப்பின் ஒரு நிமிடமும் ஜனாதிபதி என்ற ஆசனத்தில் இருக்க மாட்டேன் எனப் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

எனவே ஜனாதிபதி மைத்திரி நல்லவர் என்பதில் சந்தேகமில்லை. அதேநேரம் ஜனாதிபதி மைத்திரியோடு இருக்கின்ற பிரதமர் ரணில் தொடர்பில் நல்ல எண்ணம் குறைவாகவே உள்ளது.

வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனுடன் கதைக்க மாட்டேன் என்ற குதர்க்கம்; அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் ஏறுமான பேச்சு; பிரபா கணேசனுடன் தர்க்கம் என்பன ஒரு நாட்டின் பிரதமருக்கு உரிய பண்பு நிலையாக தெரியவில்லை.

ஆக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் இல்லையேல் பிரதமர் ரணிலை விட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எவ்வளவோ மேல் என்ற கருத்து நிலை இந்த நாட்டில் பலமாகி விடும் கவனம்.

## இரவு நேரங்களில் பொலிஸ் ரோந்து

(நல்லூர்)

கோப்பாய் வசந்தபுரம், உரும்பிராய் மேற்கு தேரான் தோட்டம், நீர்வேலி ஆகிய இடங்களில் இளைஞர் குழுக்களின் அட்டகாசம் இரவு நேரங்களில் அதிகரித்து வருவதனால் நேற்று முதல் பொலிஸார் இரவு நேர ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை நீர்வேலிப்பகுதியில் வாழைக்குலைத் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக சிவில் பாதுகாப்புக்குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-134)

## இன்று இடம்பெறும்

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் பிணக்கு தொடர்பான கலந்துரையாடல்கள் சித்திரை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றாது எனவும் அணமைய பிணக்குகள் தொடர்பான கலநதுரையாடல்கள் இன்று நடைபெறும் எனலும் மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (இ-134)

## பதின்ம வயதுச் சிறுமியை காணவில்லையென முறைப்பாடு

(முள்ளியவளை)

முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் வசித்து வருகின்ற அ. அலென்சியா (வயது -14) என்ற சிறுமி கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இருந்து காணாமற்போயுள்ளதாக பெற்றோர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதியில் இருந்து இன்று வரை குறித்த சிறுமி தொடர்பில் எவ்வித தகவலும் அறிய முடியவில்லையென பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமி மு/கலைமகள் வித்தியாலயத்தில் தரம்-09 இல் கல்வி பயின்று வருகின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-302)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கலும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் இன்று

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை நாடளாவியரீதியில் நடைபெறும்.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு,

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

காலை நிகழ்வினைத் தொடர்ந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளதோடு வருகை தருகின்ற இளைஞர்களுக்கான இளைஞர் சேவைகள் மன்றம் தொடர்பான தெளிவூட்டல்கள், தொழில் பயிற்சிகள் தொடர்பான தகவல்கள் (VTA, NAITA) வழங்கப்படவுள்ளது.

மாலை 3.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வட மாகாண சபை உறுப்பினர்களின் பங்கு பற்றுதலுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 153 இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளது. (2-281)

## பேருந்து சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம் சாலையினால் இதுவரை காலம் சேவை யாற்றாது இருந்த வழி இலக்கம் 775/3 பேருந்துச் சேவை நேற்று முதலாம் திகதி தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலாளர் ஊடாக பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கையினையடுத்து மீண்டும் சேவையை ஆரம்பித்துள்ளது.

இச்சேவை யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பித்து புத்தூர் சந்தியூடாக வாதரவத்தை வரை இடம்பெறும் என இ.போ.ச. வடபிராந்திய சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக யாழ்.குடாநாட்டின் சில பகுதிகளில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி இன்று பளை நகரம், புலோப்பளை, அல்லிப்பளை, சுன்னாகம் நகரம், அம்பனை, கந்தரோடை, சுன்னாகம் ஐயனார் கோயிலடி, மயிலணி, கல்லாரை, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, கீரிமலை, கீரிமலை துணைக்கடற்படை முகாம், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, சுன்னாகம் கார்கில்ஸ் பி.எல்.சி. ஆகிய பிரதேசங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை சங்குவேலி ஒருபகுதி, மெமோறியல் லேன், ஆனந்தா வீதி, மானிப்பாய் இணுவில் வீதி, மானிப்பாய் நகரம், சுதுமலை அம்மன் கோவிலடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் கார்கில்ஸ் பி.எல்.சி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## ஆட்டுக்குட்டி கைதானார்

(கரணவாய்)

அல்வாய் பகுதியில் கடந்த மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற குடும்பஸ்தரின் கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேக நபரை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 3 மணியளவில் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜஃபர் தலைமையிலான விசேட புலனாய்வு பிரிவினரே குறித்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

ஆட்டுக்குட்டி என அழைக்கப்படும் குறித்த சந்தேக நபர் கொடிகாமம் பகுதியில் மறைந்திருந்த வேளையே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய சந்தேக நபர்களை தேடி வருவதாகவும் அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (இ-60)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாடு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆர்.சிறிமோகன் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-15)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



மன அழுத்தம் என்பது உடலால் செய்யும் வேலைகளால் ஏற்படுவது இல்லை. நாம் வாழ்க்கையை அணுகும் முறையால் ஏற்படுவது. தியானங்களால் மட்டும் மன அழுத்தங்களிலிருந்து வெளிவரமுடியாது.

எப்போது எங்கள் உறவுமுறைகளில் அன்பையும் நட்பையும் அனுபவிக்கின்றோமோ அப்போதுதான் மனஅழுத்தங்களிலிருந்து விடுபடலாம்.

நோய் அல்லது ஆரோக்கியமற்ற நிலை எம்மை அளிப்பதற்காகவே அவை வெளிப்படுகின்றன.

சிக்கல்கள் என்பது நம் எண்ணங்களில் ஒருமாற்றம் தேவை என்பதைக் காட்டுகின்றது. உங்களுக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டால் அதை உங்களால் பார்க்கமுடியுமா? வாழ்க்கையில் தியானம் என்பதே நம் வாழ்க்கையின் மோசமான பகுதிகளைப் பார்த்தல்தான். அதுவே மன அழுத்தத்தில் இருந்து விடுதலை பெறச்சிறந்த வழியும் ஆகும்.

மனஅழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கான சில வழிமுறைகளாவன, சீரான சுவாசப்பயிற்சி, சீரான உடற்பயிற்சி, சீரான உணவுப்பழக்கவழக்கங்கள், சீரான ஓய்வு சீரான உறக்கம், சீரான தியானப் பயிற்சி, சீரான அரவணைப்பு என்பனவாகும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



யார் உங்களுக்கு வலிமை தருவார்கள்? வலிமை, வலிமைதான் நமக்கு இப்போது தேவை. வலிமை பெறுவதற்கான முதற்படி உபநிடதங்களை அடைந்து நான் ஆன்மா என்று நம்புவதுதான்.

இதுவல்லவா வலிமை, இதுவல்லவா வலிமை. நண்பர்களே, என்நாட்டு மக்களே, உபநிடதங்களை அதிகம் படிக்கப்படிக்க நான் உங்களுக்காக அதிகம் கண்ணீர் சிந்துகிறேன். வலிமை, வலிமை, நாம் வலிமை பெறுவதற்கான செயல்முறை வழி அவற்றுள் சொல்லப்பட்டிருக்கிறது.

முதலில் நமது இளைஞர்கள் வலிமை பெற்றவர்களாக வேண்டும். மத உணர்ச்சி அதற்குப் பின்னரே வரும். என் வாலிப நண்பர்களே, வலிமை பெறுங்கள்.

நீங்கள் கீதையைப் படிப்பதைவிட காற்பந்தாடுவதன்மூலம் சொர்க்கத்திற்கு மிக அருகில் செல்லமுடியும். இவை தைரியமான வார்த்தைகள். இருப்பினும் இவற்றைநான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில்நான் உங்களை நேசிக்கிறேன். பிரச்சினை எங்கு என்பது எனக்குத் தெரியும். எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. உங்கள் கைகால் தசைகளில் இன்னும் கொஞ்சம் வலிமை சேர்ந்தால் கீதையை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 161 தேசிய போதனாக்கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு மத்திய கல்வி அமைச்சில் ஆசிரியர் நியமனம் வழங்கல்

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 161 தேசிய போதனாக்கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி மத்திய கல்வி அமைச்சில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவிருக்கிறது.(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)மேற்படி நியமனத்திற்காக நியமிக்கப்படவிருக்கும் தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களுக்கு பாடசாலை தெரிவினை மேற்கொள்ள வதற்காக நாளை மறுதினம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பட்டியலில் குறிப் பிடப்பட்ட முதல் 90 பேருக்கும் காலை 9 மணிக்கும் ஏனையோருக்கு மதியம் பிற்பகல் 1 மணிக்கும் செம்மணிவீதி, நல்லூரில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நேர்முகத் தேர்விற்கு குறிப்பிடப்பட்ட டிப்ளோமாதாரிகளை பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றின் மூலப்பிரதி மற்றும் போட்டோ பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள். (இ

| இல | பெயர் | பாடம் | முகவரி |
|---|---|---|---|
| 1 | சபீந்திரன் பஸ்லீன் | வடிவமைப்பும் தொழில்நுட்பமும் | மல்லாகம் |
| 2 | எஸ்.பபிதா | உணவும் தொழில்நுட்பமும் | சித்தங்கேணி |
| 3 | தீபிகா விஜேந்திரசர்மா | ஆரம்பக்கல்வி | கந்தர்மடம் |
| 4 | அகல்யா ஜெகநாதன் | ஆரம்பக்கல்வி | கோப்பாய் |
| 5 | குவேனி சேகர் | ஆரம்பக்கல்வி | அல்வாய் |
| 6 | பிரபாலினி ஜோகநாதன் | ஆரம்பக்கல்வி | இணுவில் |
| 7 | சோபிதா தம்பையா | ஆரம்பக்கல்வி | சாவகச்சேரி |
| 8 | சோபனா மகேந்திரன் | ஆரம்பக்கல்வி | கரவெட்டி |
| 9 | கஜா்சனா சிவத்தம்பி | ஆரம்பக்கல்வி | அச்சுவேலி |
| 10 | வினோஜா இரத்தினசிங்கம் | ஆரம்பக்கல்வி | கரவெட்டி |
| 11 | சசிகலா பரமசோதி | ஆரம்பக்கல்வி | காரைநகர் |
| 12 | மயூரி பரமசோதி | ஆரம்பக்கல்வி | பண்டத்தரிப்பு |
| 13 | சஜிதா சபாரத்தினம் | ஆரம்பக்கல்வி | பருத்தித்துறை |
| 14 | சுஜா இரா செந்திரகுமார் | ஆரம்பக்கல்வி | சுன்னாகம் |
| 15 | சுகன்யா சுந்தரமூர்த்தி | ஆரம்பக்கல்வி | கொக்குவில் |
| 16 | பானுரேகா கிருஸ்ணப்பிள்ளை | ஆரம்பக்கல்வி | கரவெட்டி |
| 17 | விசிதா தங்கத்துரை | ஆரம்பக்கல்வி | பண்டத்தரிப்பு |
| 18 | மயூரதி குலசிங்கம் | ஆரம்பக்கல்வி | காரைநகர் |
| 19 | கஜந்தினி ஸ்ரீஸ்கந்தராஜன் | ஆரம்பக்கல்வி | அளவெட்டி |
| 20 | எ.சுகானா | ஆரம்பக்கல்வி | வவுனியா |
| 21 | வி.சுகந்தினி | ஆரம்பக்கல்வி | சுன்னாகம் |
| 22 | அருட்பிரகாசம் துளசிமாறன் | ஆரம்பக்கல்வி | புலோலி |
| 23 | தேவலோகநாதன் துஸ்ஸந்தன் | ஆரம்பக்கல்வி | நீர்வேலி |
| 24 | கே.அபிராமி | ஆரம்பக்கல்வி | திருவையாறு |
| 25 | சோபிதா தவேந்திரன் | ஆரம்பக்கல்வி | காரைநகர் |
| 26 | சிந்துஜா மகேந்திரராசா | ஆரம்பக்கல்வி | சங்கானை |
| 27 | தக்சனா தயாளநேசன் | ஆரம்பக்கல்வி | கொக்குவில் |
| 28 | நடராசா திவ்யோகராஜா | ஆரம்பக்கல்வி | களுவாஞ்சிக்குடி |
| 29 | மகேந்திரன் புவிதா | ஆரம்பக்கல்வி | மட்டக்களப்பு |
| 30 | லக்ஸ்சனா செல்வநாயகம் | ஆரம்பக்கல்வி | ஊர்காவற்றுறை |
| 31 | உஷாலினி செல்லத்துரை | ஆரம்பக்கல்வி | மாதகல் |
| 32 | கஜாலினி மகேஸ்வரன் | ஆரம்பக்கல்வி | வட்டுக்கோட்டை |
| 33 | ரேணுகா சுப்பிரமணியம் | ஆரம்பக்கல்வி | கொக்குவில் |
| 34 | மனோஜா பொன்னுத்துரை | ஆரம்பக்கல்வி | கரவெட்டி |
| 35 | கீர்த்தனா கதிர்காமரஞ்சன் | ஆரம்பக்கல்வி | கரவெட்டி |
| 36 | சுஜிதா நாகேஸ்வரன் | ஆரம்பக்கல்வி | அச்சுவேலி |
| 37 | ரோகினி கைலைநாதன் | ஆரம்பக்கல்வி | மானிப்பாய் |
| 38 | ஆர்.தர்சிகா | ஆரம்பக்கல்வி | வல்வெட்டித்துறை |
| 39 | தோமஸ் சர்மி | ஆரம்பக்கல்வி | மட்டக்களப்பு |
| 40 | நிரஞ்சினி வேலும்மயில் | ஆரம்பக்கல்வி | ஆனைக்கோட்டை |
| 41 | கே.துஸ்பநாதன் | ஆரம்பக்கல்வி | பூநகரி |
| 42 | எம்.திலீபனா | ஆரம்பக்கல்வி | புத்துவெட்டுவான் |
| 43 | எம்.தர்சினி | ஆரம்பக்கல்வி | வரிக்குட்டியூர் |
| 44 | ஆர்.பிரதீபன் | ஆரம்பக்கல்வி | வவுனியா |
| 45 | ரி.வேலாயுதம் | ஆரம்பக்கல்வி | வவுனியா |
| 46 | ஜெயானந்தமூர்த்தி மிதுலா | ஆரம்பக்கல்வி | தம்பிலுவில் |
| 47 | லிசாந்தினி சிவனந்தன் | ஆரம்பக்கல்வி | யாழ்ப்பாணம் |
| 48 | ஜகீனா வரதன் | ஆரம்பக்கல்வி | புன்னாலைக்கட்டுவன் |
| 49 | ஆர்.தர்சன் | ஆரம்பக்கல்வி | கிளிநொச்சி |
| 50 | வி.ரஞ்சினி | ஆரம்பக்கல்வி | விசுவமடு |
| 51 | தினுபா நவரட்ணம் | ஆரம்பக்கல்வி | கொக்குவில் |
| 52 | வி.தனுஜா | ஆரம்பக்கல்வி | சாவகச்சேரி |
| 53 | எஸ்.குணரத்தினம் | ஆரம்பக்கல்வி | பளை |
| 54 | பொ.விசாந்தினி | ஆரம்பக்கல்வி | வாழைச்சேனை |
| 55 | ரி.கேதீஸ்குமார் | ஆரம்பக்கல்வி | முல்லைத்தீவு |
| 56 | எஸ்.அனுசா | ஆரம்பக்கல்வி | கிளிநொச்சி |
| 57 | சி.பிருந்தாவனா | ஆரம்பக்கல்வி | தம்பிலுவில் |
| 58 | வி.டியுக்சினி | ஆரம்பக்கல்வி | மானிப்பாய் |
| 59 | ஆர்.சுபாசினி | ஆரம்பக்கல்வி | வவுனியா |
| 60 | என்.கஜேந்தினி | ஆரம்பக்கல்வி | முல்லைத்தீவு |
| 61 | க.சரண்ஜா | விஞ்ஞானம்(தமிழ்) | மானிப்பாய் |

(தொடரும்)

# இலங்கைக் கடற்பரப்புக்குள் மீனவர்கள் செல்லக்கூடாது!

**(கொழும்பு) சுஷ்மா சுவராஜ் கண்டிப்பு**

**தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடிக்காக செல்லக் கூடாது என்று இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.**

தம்மை டில்லியில் வைத்து சந்தித்த தமிழக மீனவர்களின் பிரதிநிதிகளிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்த அறிவிப்பை விடுத்தார்.

தாம் இலங்கை கடற்பரப்பில் செல்லாது போனால் தொழிலில் உரிய அறுவடையை பெறமுடியாது என்று தாம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியதாக 22பேரை உள்ளடக்கிய தமிழக மீனவப்பிரதிநிதிகள் கூறினர்.



எனினும் கைதுசெய்யப்படும் மீனவர்களை விடுதலை செய்யும் நடவடிக்கை என்பது கடினமான காரியமாக மாறிவருகிறது என்று அமைச்சர் சுஸ்மா குறிப்பிட்டார்.

மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கை கடற்பரப்புக்குள் சென்றால், இலங்கை அரசாங்கம் அவர்களை விடுவிப்பதில் தாமதத்தை காட்டலாம் என்று சுஸ்மா தெரிவித்தார்.(இ-5)

# தேசிய அரசியலின் அழிவுக்கு சம்பிக்க,ரத்னதேரர் காரணம்

## நாலக தேரர் குற்றச்சாட்டு

நாட்டின் தேசிய அரசியல் அழிக்கப்பட்டமைக்கு காரணம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரே என பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தேசிய அரசியல் மேலும அழிவடைவதற்கு இடமளிக்கக் கூடாது.

பிரிவினைவாதம் உள்ளவரை நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் காணப்பட வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி (பு.யூ.ர) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை9 மணி-மு.ப11 மணிவரை பிறவுண் றோட், கலட்டிச் சந்தியிலும் மு.ப.11 மணி-பி.ப 1 மணிவரை வீரகத்திப் பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கையிலும் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணி-மு.ப11 மணி வரை காமாட்சி பாலர் பாடசாலையிலும் மு.ப.11 மணி-பி.ப 1 மணி வரை மெதடிஸ்த மிஷன் பாடசாலை , கலட்டி இராமநாதன் வீதியிலும் எதிர் வரும் 7ஆம் திகதி காலை 9 மணி-மு.ப11 மணி வரை சைவபரிபாலன சபை நீராவியடியிலும்மு.ப.11 மணி-பி.ப 1மணிவரை ஆரோக்கியமாதர் கோவிலடி கஸ்தூரியர் வீதியிலும் எதிர்வரும்8 ஆம் திகதி காலை 9 மணி-மு.ப.11மணிவரை கனகசபை வீதியிலும் மு.ப.11 மணி - பி.ப1 மணிவரை சிவகுருநாதர் கோவி லடி, சிவகுருநாதர் வீதியிலும் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை9 மணி -மு.ப. 11 மணிவரை குமாரசுவாமி வீதி Gs Office யிலும் மு.ப.11 மணி -பி.ப 1மணி வரை ஆத்திசூடி சன சமூக நிலையத்திலும் ,12 ஆம் திகதி காலை 9 மணி - மு.ப 11மணிவரை ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதியிலும் மு.ப 11 மணி -பி.ப1 மணி வரை கலா ஜோதி சனசமூக நிலையத்திலும்எதிர்வரும் 13 ஆம் திகதி காலை9 மணி - மு.ப.11 மணி வரை முருகமூர்த்தி வீதியிலும் மு.ப 11 - பி.ப1 மணிவரை கலைவாணி சனசமூக நிலையத்திலும்,எதிர்வரும் 14 ஆம் திகதி காலை9 மணி-மு.ப 11 மணி வரை தாமரை வீதியிலும் மு.ப11 மணி-பி.ப1மணி வரை பெரிய தம்பிரான் வீதியிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை9 மணி- மு.ப.11 மணிவரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் மு.ப11 மணி -பி.ப.1 மணி வரை கலைமகள் சனசமூக நிலையம், கே.கே.எஸ் வீதியிலும் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணி - மு.ப.11 மணிவரை பிறவுண் வீதி, 2 ஆம் ஒழுங்கையிலும் மு.ப11 மணி - பி.ப.1 மணிவரை பிறவுண் வீதி 1 ஆம்ஒழுங்கையிலும் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணி - மு.ப.11 மணி வரை அன்னசத்திர லேன், நாவலர் வீதியிலும் மு.ப 11 மணி- பி.ப1 மணிவரை மணி கூட்டு லேனிலும் எதிர்வரும் 20 ஆம்திகதி காலை9 மணி - 11 மணிவரை சபாபதி லேனிலும் மு.ப 11 - 1மணிவரை, பூநாறி லேனிலும் எதிர் வரும் 21 ஆம் திகதி காலை 9 மணி - மு.ப.11 மணிவரை பலாலி வீதி 4 ஒழுங்கையிலும் மு.ப11 மணிதொடக்கம் பி.ப 1 மணிவரை ஐயனார் கோவிலடியிலும் நடைபெறும் (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்சனின் அதிரடி வீண்; மும்பை 8 ஓட்டங்களால் வெற்றி

சாம்சன் தனது துடிப்புமிக்க துடுப்பாட்டத்தினால் அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்ல முயற்சித்த போதிலும், அதற்கு மும்பை அணி வீரர்கள் இம்மியும் இடம்கொடுக்க மறுக்கவே ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 8 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸிடம் போராடித் தோற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்றைய 2ஆவது போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மும்பையில் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான், மும்பை இந்தியன்ஸ் அணியை முதலில் துடுப்பாட்டம் செய்ய பணித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய மும்பை: சிம்மன்ஸ் (38), பட்டேல் (23), ரோகித் சர்மா (27), பொல்லார்ட் (24), ராயுடு (53) ஆகியோரின் ஆட்டத்தால் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 187 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பில் குல்கர்னி 2, சௌதி, தெரோன், அன்கிட் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

188 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்களின் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை எடுத்து 8 ஓட்டங்களால் போராடித் தோற்றது.



துடுப்பாட்டத்தில் இறுதிவரை போராடி ஓட்டங்களைக் குவித்த சஞ்சு சாம்சன் 46 பந்துகளில் 76 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் மக்லேனகன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் அம்பதி ராயூடு தெரிவானார்.

தொடர்ச்சியாக 5 போட்டிகளில் வென்ற ராஜஸ்தான் அணிக்கு கடைசி 5 லீக் போட்டிகளின் முடிவுகள் (3 தோல்வி, 2 முடிவு இல்லை) சிறப்பாக அமையவில்லை.




## பஞ்சாப்பை எளிதில் வீழ்த்தியது டில்லி

சகீர் கான் தனது மீள்வருகையை பிரமாதமாக வெளிப்படுத்த, அதற்கு அணித் தலைவர் ஜே.பி.டுமினி, குல்ரர்-நைல் பக்கபலமாக செயற்பட, இராசியில்லாத சொந்த மைதானமான பொரோஸ்ஷா கொட்லா அரங்கத்தில் இறுதி யாக அமைந்த குழு நிலைப் போட்டியில் பஞ்சாப் அணியை 37 பந்துகள் மீதமிருக்கையில் 9 விக்கெட்டுக்களால் டில்லி டேர்டெவில்ஸ் அணி இலகுவாக வெற்றி கொண்டது.



8ஆவது ஐ.பி.எல். திருவிழாவின் நேற்றைய நாளின் முதல் போட்டி டில்லி - பஞ்சாப் அணிகளுக்கு இடையில் டில்லியிலுள்ள பொரோஸ் ஷா கொட்லா அரங்கில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி முதலில் களத்தடுபபை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி வீரர்கள், டில்லி அணி வீரர்களின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

அவ்வணி தனது முதல் நான்கு விக்கெட்டுக்களையும் 3.3 ஓவர்களில் 10 ஓட்டங்களுக்கு இழந்து தத்தளித்தது.

இவ்நிலைமை இறுதிவரை தொடர பஞ்சாப் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் பஞ்சாப் அணி சார்பில் டேவிட் மில்லர் 42, அக்சர் பட்டேல் 22 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் சகீர் கான் 2, குல்ரர்-நைல் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

119 ஓட்டங்கள் என்ற சுண்டங்காய வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய டில்லி அணியின் மயங் அகர்வால் - ஸ்ரேயாஸ் அய்யர் இணை, பஞ்சாப் அணியின் பந்துவீச்சை நேர்த்தியாக எதிர்கொண்டு ஓட்டங்களைச் சேர்த்தது.

இவ் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 12.3 ஓவர்களில் 106 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது அய்யர் 54 ஓட்டங்களுடன் அக்சர் பட்டேல் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து திவாரி களம் இறங்க, மறுமுனையில் அகர்வால் அரைச் சதம் கடந்தார்.

இறுதியில் டில்லி அணி தனது வெற்றியிலக்கை (119) 13.5 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களால் அடைந்தது.

களத்தில் அகர்வால் 52, திவாரி 5 ஓட்டங்களுடன் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக டில்லி அணியின் குல்ரர்-நைல் தெரிவானார்.

## திரைக் கலைஞர்கள் ஒன்றுகூடல் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திரைக் கலைஞர்களுக்கான ஒன்று கூடல் நாளை 3ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்ட திரைக் கலைச் சங்க நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளதால் சகல திரைக் கலைஞர்களையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ)

## இனவாதத்தின்...

ஜனநாயக மக்கள் முன்னணியின்மேதின ஊர்வலமும், கூட்டமும் கொழும்பு கொட்டாஞ்சேனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய கட்சித்தலைவர் மனோ கணேசன்,

எமது கடந்த கால தலைவர்களை போல் நாங்கள் ஒரு கோப்பை கோப்பிக்கு மயங்கி தமிழர்களின் உரிமைகளை தாரை வார்க்கப் போகின்றவர்கள் அல்ல. ஆகவே நாங்கள் இனி ஏமாற தயாரில்லை.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் நாங்கள் கலந்துரையாடும்போது ஒரு பெரும்பான்மை தலைவர், மனோ நீங்கள் சாகும் வரை தலைவராகவும், எம்பியாகவும், அமைச்சராகவும் இருக்க முடியுமே என்று சொல்லி பார்த்தார்.

அதன் அர்த்தம் எனது பதவியை மட்டும் பார்த்துக் கொண்டு அமைதியாக இருங்கள் என்பதாகும். [illegible] அமைச்சராவதும் பற்றி எனக்கு பிரச்சினையில்லை.

ஆனால், அதைவிட எங்கள் இனத்தின் விகிதாசாரத்துக்கு ஏற்ப எங்களை பிரதிநிதித்துவம் செயயும் எண்ணிக்கையில் எம்பிக்கள் இருக்க வேண்டும். அதுதான் என் நோக்கம் என்று நான் அவருக்கு பதில் சொல்லி விடடேன்.

மே தினத்தின் பயன்பாடு காலவோட்டத்துக்கு ஏற்பமாறியுள்ளது. தொழிலாளர்களின் விடுதலை வேட்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட உழைப்பாளர் தினம், இன்று அடக்கி ஒடுக்கப்பட்ட ஒட்டுமொத்த மக்களின் குரலை ஓங்கி ஒலிக்கும் தினமாக உருமாறியுள்ளது.

இன்று இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் உடனடி சவால்கள் இரண்டு ஆகும். ஒன்று, அவசரகதியில் உத்தேசிக்கப்படும் தேர்தல் முறை மாற்றம் ஆகும். இரண்டாவது, மீண்டும் தலையெடுக்க நினைக்கும் சர்வதிகார இனவாதம் ஆகும்.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் நாம் இன்று ஒன்று சேர்ந்துள்ளோம். தமிழ், முஸ்லிம் கட்சிகள் மட்டுமல்ல, ஜேவிபியும் எம்முடன் கரங்கோர்த்துள்ளது. எதிர்வரும் வாரங்களில் நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துளோம்.

எமது ஒன்றுபட்ட சக்தியின் மூலமாகவே இந்நாட்டிலே தொன்று தொட்டு நிலவும் இனவாதத்தின் [illegible] அத்தியாயமான அடாவடி தேர்தல் முறை மாற்றம் என்ற அபாயத்தை நாம் வெற்றிக் கொள்ளலாம். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம். இதில் எவராவது தனிவழி சென்று காட்டிக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால், அவர்களை மக்கள் தேர்தல் வேளைகளில் உரிய முறையில் கவனிக்க வேண்டும்.

இரண்டாவது சவால் மீண்டும் தலையெடுக்க நினைக்கும் சர்வதிகார இனவாதம் என்று சொன்னேன். ஏன் சர்வதிகார இனவாதம்என்று சொன்னேன்றால், அதற்கு காரணம் உண்டு. இந்த நாட்டில் இன்று எங்களுடன் அரசியலில் கூட்டு குடித்தனம் செய்பவர்களும் இனவாதிகள்தான். ஆனால், மகிந்தவின் இனவாதம் சர்வாதிகார அம்சங்களை கொண்டது.

இவர்களுடன் பேசி தீர்க்க முயற்சிக்கலாம். மகிந்தவுடன் பேசக்கூட முடியாது. அந்த ஆட்சி, நமக்கு எதிராக இராணுவ பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்ட ஆட்சியாகும்.

எனவே இந்த பேசக்கூடிய இனவாதிகள் சிலருடன் சேர்ந்து பேசக்கூட முடியாத சர்வதிகார இனவாதி மகிந்தவை தோற்கடித்தோம். இப்போது அவர் மீண்டும் எழுந்து வர முயல்கிறார். அதற்கு இடம் கொடுக்க முடியாது. மீண்டும் தலையெடுக்க நினைக்கும் சர்வதிகார இனவாதத்தின் தலையில் மீண்டும் அது எழும்ப முடியாத வண்ணம் ஓங்கி அடிப்போம்.

எழுந்து வரும் சர்வதிகார இனவாதத்தையும் கூண்டோடு வெட்டி சாய்க்க இந்த மேதின நிகழ்வில் உறுதி பூணுவோம் என்றார் மனோ. (செ-11)

# 22 வருடங்களிற்குப் பின்னர்
# பிரேமதாஸ நினைவு நிகழ்வில் ஜனாதிபதி ஒருவர் பங்கேற்பு



பிரேமதாஸ மறைந்து கடந்த 22 வருடங்களுக்குள் இம்முறை தான் அவரின் ஒரு நினைவு தினத்திற்காக ஒரு நாட்டின் ஜனாதிபதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட பெருமை என்னையே சாரும் என மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் 22ஆவது நினைவு தின வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார்.

ஏழை மக்களின் நாயகனாக வாழ்ந்து அந்த மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்த ஒரு தலைவர் தான் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ.

இந்த வைபவத்திற்கு நான் வந்ததையிட்டு திருமதி கேமா பரேமதாஸ அவர்கள் " பிரேமதாஸ மறைந்து கடந்த 22 வருடங்களுக்குள் இம்முறைதான் அவரின் ஒரு நினைவு தினத்திற்காக ஒரு நாட்டின் ஜனாதிபதி பிரதம அதிதியாக வந்த பெருமை என்னையே சாரும் எனக் கூறினார். அதனையிட்டு நானும் மிகவும் சந்தோசமடைகின்றேன்.

என மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் 22 ஆவது நினைவு தின வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றினார். இந் நிகழ்வில் பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்கள் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் -

நான் பொலனறுவை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றம் முதன் முதலில் 1989ம் ஆண்டு வந்தபோது மறைந்த ரணசிங்க பிரேமதாச அவர்களே அப்பொழுது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தார்.

அத் தருணத்தில் அவர் சகல கட்சி பாரளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து சகலருக்கும் தத்தமது மாவட்டத்தில் அபிவிருத்திக்காக வருடாந்தம் 25 லட்சம் ரூபாவை ஒதுக்கித்தந்தார். அவர் வீடமைப்பு மற்றும் ஜனசவிய போன்ற திட்டங்களை அமுல்படுத்தினார்.

அவரின் புதல்வர் சஜித் பிரேமதாஸவும் அவரின் அடிச்சுவட்டை பின்தொடர்ந்து வரும் ஒர் இளம் அரசியல்வாதி. அவரும் ஏழை மக்களின் ஒரு சிறந்த சேவையாளர்.

இந்த நாட்டின் ஏழைமக்களின் துயர் துடைப்பதற்கே அவருக்கு வீடமைப்பும் சமுர்த்தி அமைச்சினை பிரதமர் ரணிலுடன் கலந்துரையாடி வழங்கினோம்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்கள் நிறைவேற்று அதிகாரமிக்க ஒரு ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் ஏழை மக்களுக்காக பாரிய சேவையை செய்த ஒரு தலைவர் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு உரையாற்றினார்.

இந் நிகழ்வின்போது ஜனாதிபதி, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கேமா பிரேமதாஸ, துலாஞ்சலி ஜயக்கொடி, சஜித் பிரேமதாஸ, கொழும்பு மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் ஆகியோரும் முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து பூச்செண்டு வைத்து அஞ்சலி செலுத்தினா். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப்பெரிய புத்தர்...

குருநாகல் மாவட்டத்தில் உள்ள ரம்படகல்ல வித்யசாகர விகாரையில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய புத்தர் சிலை நேற்று முன தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தர் சிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன தினம் மாலை திறந்து வைத்தார்.

67.5 அடி உயரமான இந்த புத்தர் சிலையே, கற்பாறையில் செதுக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய புத்தர் சிலையாகும். சிலையைச் செதுக்கும் பணிகள் கடந்த 2002-ம் ஆண்டு ஆரமபிக்கப்பட்டன. இந்த சிலையை பாரிய பாறையொன்றில் சிற்பாச்சாரியார் முத்தையா தலைமையிலான இந்திய சிற்பிகள் குழு வொன்றே செதுக்கி உருவாக்கியுள்ளது.

இந்தப் புத்தர் சிலையை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக, விகாரையின்பிரதம பிக்குவான, வண. எகொட முல்லே அமரமொழி தேரர் தெரிவித்துள்ளார். (செ)

## சக்தி...

ததாக அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சக்திவாய்ந்த நில நடுக்கமாக இருந்தாலும் பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் சார்பில் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.

நேற்று முன்தினம் வியாழக் கிழமையும் இதே பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டது. அது ரிச்டர் அளவில் 6.7 ஆக பதிவாகியிருந்தது. இருப்பினும் பெருமளவில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

அந்தமானிலும் நிலநடுக்கம் அந்தமான் தீவுகளிலும் நேற்று லேசான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவில் 5.4 ஆக இருந்தது. இத்தகவலை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

மேலும், உயிர்ச்சேதமோ, பொருள்சேதமோ பெருமளவில் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# கூட்டுறவுத்துறை...

வடக்கு கூட்டுறவுத்துறை வீழ்ச்சியடைவதற்கு போர் மட்டும் காரணமல்ல, தனியார் கம்பனிகளின் அதீத அதிகரிப்பும் முன்னேற்றமும், சர்வதேச வர்த்தகமும்தான் காரணமாகவும் உள்ளன.

இதனை சவாலாக கொண்டு நாமும் நவீன முறையிலான வர்த்தக முறைமையை மேற்கொள்வதோடு சர்வதேச தரத்திலான முறையை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை அரசு தனது பொருளாதாரத்தை எப்பொழுது திறந்த பொருளாதார கொள்கையாக மாற்றியதோ அப்பொழுது இருந்து கூட்டுறவு துறையின் வீழ்ச்சி ஆரம்பித்தது. எனினும் தற்போது யார் நினைத்தாலும் இந்த திறந்த பொருளாதார முறையை மாற்றியமைக்க முடியாது.

வடக்கில் வேலையில்லா பிரச்சினை அதிகரித்த நிலையில் உள்ளது. குறிப்பாக படித்த பட்டதாரிகளுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் இந்நிலை அதிகமாகவே காணப்படுகின்றன. வடக்கு மாகாண சபையினை பொறுத்த வரையில் வேலை வாய்ப்பு என்பது மட்டுப்படுத்தப்பட்ட ரீதியிலும் தகுதியடிப்படையிலுமே வழங்க முடியும்.

ஆனால் கூட்டுறவுத்துறை அவ்வாறானதல்ல. இந்த இருதரப்பினருக்கும் தேவையான அளவு வேலைவாய்ப்பை வழங்க கூடிய சுதந்திரமும் விசாலமும் கொண்டதாகும்.

இங்கு வடக்கு மாகாண சபையிடம் கூட்டுறவு ஊழியர்களினால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஏனைய அரச ஊழியர்களை போன்று கூட்டுறவு ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்பதாகும். அக்கோரிக்கையினை நாம் ஏற்றுக்கொள்வதோடு நடைமுறைபடுத்துவதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்வோம்.

இதனைவிட கூட்டுறவு ஊழியர்களின் சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண கூட்டுறவுத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கு வடக்கு மாகாண சபை நூறுநாள் திட்டமொன்றினை எதிர்வரும் பதினைந்தாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தவுள்ளது என தெரிவித்த அவர்,

இதுதொடர்பில் அனுபவமுள்ளவர்கள் கூட்டுறவு துறை சார்ந்தவர்கள் தமது யோசனைகள் திட்டங்களை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் தம்மிடம் கையளிக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-4)

# மக்கள் எழுச்சியுடன்...

குறித்த ஊர்வலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி ஊர்வலம் ஆயிரக்கணக்கான கூட்டுறவு ஊழியர்களின் பங்கேற்புடன் நல்லூர் கந்தன் ஆலய வீதியூடாக பயணித்து கோயில் வீதியூடாக யாழ்.நகரை வந்தடைந்து பின்னர் முற்றவெளியை அடைந்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னர் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்மே தின கூட்டமும் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், பா.சத்தியலிங்கம், உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், கேசவன் சயந்தன், பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் முடிவில் குறித்த ஊர்வலத்தில் பங்குபற்றிய சிறநத ஊர்வலங்களுக்கான பெறுமதி மிக்க பரிசில் தொகைகளும் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (செ-4)


## வேலையாள் தேவை

சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை

1. உணவு பரிமாறுபவர்
2. தேநீர் தயாரிப்பவர்
3. பார்சல் கட்டுபவர்
4. சமையல் உதவியாளர்

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வேலைக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

T.P : 077 2495 800 (261)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



அமரர் சதாசிவம் பராசக்தி

பிறப்பு : 07.10.1923
இறப்பு : 04.04.2015

கடந்த பங்குனித்திங்கள் 21-ம் நாள் 04.04.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் சதாசிவம் பராசக்தி அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் 02.052015 சனிக்கிழமை இன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் பின்னர் திங்கட்கிழமை (04.05.2015) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனநிகழ்விலும்கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். [illegible] குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி[illegible] ஓடோடிவந்து நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தோர் மற்றும் இறுதிக்கிரிகைகளில் பலவழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்தநன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

– குடும்பத்தினர்
இல-50, A9 வீதி,
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி. (260)


# சிறுநீரக கற்களை அகற்...

அகற்றும் முறையே இதுவரை காலமும் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இம்முறையினால் பல பாதிப்புக்களையும் நோயாளர்கள் எதிர்நோக்கி வந்துளளனர். வெட்டிய காயம் ஆறும் வரை வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டிய நிலையும் காணப்பட்டு வந்தது.

எனினும் சிறுநீரக கல்லை தோல் மூலம் அகற்றும் இப்புதிய சிகிச்சை முறை மூலம் காயம் ஏற்படாததோடு சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளர் மறுதினமே வீடு செல்லவும் முடியும்.

இம்முறை வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக நேற்று முன்தினமே அறிமுகப்படுத்தப்பட்டு முதலாவது சிகிச்சையும் வெற்றிகரமாக முடிவுற்றுள்ளது.

இச்சிகிச்சை மூலம் சிறுநீர் தொகுதியில் உள்ள கிட்னி, குழாய், சலப்பை ஆகியவற்றில் ஏற்படும் கற்களை வெட்டாமல் உடைத்து அகற்ற முடியும்.

எதிர்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் நவீன அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுமிடத்து இச்சிகிச்சை முறையினை மேலும் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும் என்றார் மருத்துவ நிபுணர்.

குறித்த சிகிச்சை முறைக்கான மருத்துவ உபகரணங்களை மத்திய சுகாதார அமைச்சு வழங்கியிருந்ததாகவும், இதனை மேலும அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பணியாளர் தெரிவித்தார். (செ-4)




கனடா
Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை
(Work with PR)
2015ம் ஆண்டு
3 இலட்சம்* பேருக்கு
நிரந்தர குடியுரிமை வழங்கும் கனேடிய அரசாங்கத்தின் புதிய திட்டத்தின்கீழ்
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
Degree/Diploma வுடன் ஒரு வருட தொழில் அனுபவம் அவசியம்!

O/L or A/L உடன் Student Visa
With/Without IELTS
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Spain etc.

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Any Visa to Any Country
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
Student Visa – Spouse Visa - Visit Visa
Rejection Appeal & Migration

FREE Assessment
மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்
Tel: 0777 32 4004, 021 222 00 11
(C-879)
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது



WEC
சட்டரீதியான வீசா ஆலோசனை மையம்
Visa consulting service

மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுதலுக்கு அமைவாக தற்பொழுது WEC நிறுவனம் வடமராட்சி நகரான நெல்லியடியிலும்...

எமது நிறுவனம் பற்றி...

- தென்மராட்சி மண்ணில் கடந்த 4 வருடகாலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் கல்லூரி.
- 150 இற்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் *IELTS, City&Guilds A1,B1* வகுப்புக்கள்.
- திருமணம் முடித்து sponsor visa இல் UK செல்பவர்களுக்கு KET EXAM இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (100% பரீட்சையில் சித்தியடைய நாம் உத்தரவாதம் வழங்குகின்றோம்)

City & Guilds Approved Centre-UK

கடந்த 6 மாதத்தில் மட்டும் 7 வீசாக்கள்
(C-869)

சங்கத்தானை , சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே)
பருத்தித்துறை வீதி, நெல்லியடி (றுகின்ஸ் Hospitel அருகே)
0779265447,0217200989



MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT
TRUTH 1965 ALDERSGATE



Duration : 1 year
New Batch Starts on 10/05/2015 at 10.00 am.

ADMISSION REQUIREMENTS
- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

ACCREDITED AND UGC APPROVED

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
(C-868)
மேலதிக விபரங்களுக்கு :
021 4 900 900
077 999 2484



IELTS இல்லாமல்
ஐரோப்பா போக
பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட 23 நாடுகளுக்குச் செல்லக்கூடிய செங்கன் விசா
பகுதி நேர வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, வேலைவாய்ப்புடன் விரும்பிய நாட்டில் குடியேறலாம்
க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தி அவசியம்!
அழையுங்கள்
0777 324 004
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
(C-879)
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்



மருந்தாளர் தேவை
பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு மருந்தாளரும் உதவியாளரும் தேவை
தொடர்புகளுக்கு : 0771728141
(C-850)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 [illegible] முங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org